திசை
THISAI

## ‘நரகத்தில்’ தோன்றிய நாரி

நோர்வே நாட்டைச் சேர்ந்த 19 வயது அழகியான மொஞகிறட் என்பவர் உலக அழகு ராணியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் நோர்வே நாட்டிலுள்ள ஹெல் (HELL) என்ற நகரத்தைச் சேர்ந்தவர். தன்னோடு போட்டி போட்ட 71 பேரை பின் தள்ளி, உலகராணி பட்டத்தைச் சுவீகரித்துள்ளார்.

இவரது சொந்த நகரான ஹெல் என்பது தமிழில் நரகம் எனப் பொருள்படும்.

திசை 2 20-4-1990 வெள்ளிக்கிழமை விலை : ரூபா 5-00 பக்கங்கள் 143 முகம் 14

# தலையாடாது நிகழும் வாலாட்டம்

# வாலையாட்ட வைக்கும் விஷமிகள் யார்?

**அண்மையில் வட கிழக்குப் பகுதியில் இயங்கத் தொடங்கியுள்ள பொலீஸ் நிலையங்களோடு சம்பந்தப்பட்ட பொலிசாரின்— குறிப்பாகச் சிங்களப் பொலிசாரின் — நடத்தை மிகுந்த பாரதூரமான விளைவுகளை இம்மண்ணில் மீண்டும் ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தை மக்கள் மனதில் நிலைக்கச் செய்துள்ளது.**

வீதியில் சென்ற பெண்களோடு சேட்டை புரிந்ததன் மூலம் தமக்கெதிராகத் தமிழ் மக்களைக் கிளர்ந்தெழ வைத்து மோதலை ஏற்படுத்தி, காயங்களை உண்டுபண்ணிய பொலிசாரின் செயலின் பின்னணி சந்தேகத்துக்கு இடமானது தொன்றுகவே இப்போ தெரிய வருகிறது.

கடந்த 10 ஆம் திகதி பருத்தித்துறையில் நடந்த சம்பவம், இதே நாளில் திருகோணமலை வீரநகர்ப்பகுதியில் நடந்த சம்பவம், பின்னர் கடந்த 13 ஆம் திகதி மட்டக்களப்பில் நடந்த சம்பவங்கள் யாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன வாகவும், திட்டமிட்ட விஷமச் செயல்களாகஇருப்பதாகவும்இப்போது இவைபற்றிய சில அரசியல் மட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இவை உதிரியாக இடம் பெற்ற, தற்செயலான நிகழ்ச்சிகளல்ல என்றும், தற்போது விடுதலைப் புலிகளுக்கும் பிரேமா அரசுக்கும் இடையே நடைபெற்றுக் கொண்டிருக் பேச்சுவார்த்தைகளைக் குழப்பியடித்து, இருபகுதியினருக்கு மிடையே மோதலை ஏற்படுத்த பிரேமாவுக்கு எதிரான சக்திகள் முயன்று வருவதன் விளைவே இது என்றும் நம்பப் படுகிறது,

அரச படைகளின் மத்தியில் எப்போதுமே தமிழர்களுக்கு எதிரான துவேஷ மனச்சாய்வுகள் இருந்து வந்துள்ளன. 1974 இல் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது நிகழ்ந்த சம்பவங்கள், 1981இல் நாச்சிமார் கோவிலடி, யாழ்நகர் சந்தை, பொது நூலகம் போன்ற இடங்களில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் இந்த பொலிஸ், அரசபடைகளே தலைமைதாங்கின என்பதை தமிழர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அரசின் நல்முயற்சிகள், இடையில் உள்ள சில விசர் நாய்களின் வாலாட்டலால் பாழடிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதில் அரசு விழிப்பாய் இருக்கவேண்டும். தலையாடாமல், வாலையாட வைக்கும் இனவாத விஷமிகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் இவ்விஷயத்தில் பக்குவப்பட்ட அணுகலை மேற்கொள்வது போலவே அரசும் இத்தகைய நிகழ்வுகளைக்கையாள முன்வரவேண்டும்.

## ஆண்டு முடிவிற்குள் திடீர்ப் பொதுத் தேர்தல்?

இவ்வாண்டு முடிவதற்குள் ஜனாதிபதி பிரேமதாஸ திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றினை நடத்தக்கூடுமென சில செய்திகள் அடிபடுகின்றன.

இப்போதிருக்கும் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவதற்கு இன்னும் சில ஆண்டுகள் இருந்தும் ஜனாதிபதி பிரேமதாஸ பொதுத்தேர்தல் ஒன்றினை ஏன் நடத்த வேண்டும் என, சில அரசியல் அவதானிகளிடம் ‘திசை’ வினவியபோது அவர்கள் கூறிய காரணங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

இப்பொழுது ஆளும் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லை. 6ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் விரும்பும் போதிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைத் திரட்டுவதில் அரசாங்கத்திற்குச் சில தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றனவாம்.

இதேநேரம் உலக வங்கி கொடுக்கும் நிர்ப்பந்தத்தினால் அரசாங்கம் மானியங்கள் சிலவற்றை நீக்கியிருப்பதுடன், சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. மாவினதும் பாணினதும் விலை மேலும் உயர்த்தப்படும் என அண்மையில் செய்திகள் வெளிவந்துள்ளன.

இத்தகைய பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக அரசாங்கத்தின்மீது மக்கள் அதிருப்தி கொள்வதற்கு வாய்ப்பானதொரு நிலை ஏற்படக்கூடும். இத்தகைய அதிருப்தியைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடாத்துவதற்கு முற்படலாம். இது அரசாங்கத்தின் செல்வாக்குச் சரிவதற்கு வழிகோலக்கூடும்.

மேற்கூறிய ஆபத்தான நிலையிலிருந்து தன் ஆட்சியைக் காப்பாற்றவே ஜனாதிபதி திடுதிப்’ என ஒரு பொதுத் தேர்தலை நடத்தலாம் என்றும் ஜே,வி.பி. யை முறியடித்துள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தடை... தடை... தடை...

வட — கிழக்கு வாழ் பொது மக்கள் பொலிஸாரிடம் சென்று முறைப்பாடு செய்வதற்கு விடுதலைப் புலிகள் தடைவிதித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு ஆங்கிலப் பத்திரிகை முற்பக்கத்தில் தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

□ □ □

அரசு உத்தியோகஸ்தர்களும்,அமைச்சர்களும் ஒழுங்கு படுத்தும் விருந்துபசார நிகழ்ச்சிகளில் மதுபானம் பாவிக்கக்கூடாது என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.


□ □ □

பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படும் புதிய மாணவர்கள் மீது ‘ராக்கிங்’ சேஷ்டைகள் அனுமதிக்கப்பட மாட்டாது. என பல்கலைக் கழக உபவேந்தர்களும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத்தலைவரும் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழகங்களிற்கு உள்ளேயோ, அல்லது வெளியிலோ ‘ராக்கிங்’ தொடர்பான உபவேந்தரின் உத்தரவு மீறப்பட்டால் பொலிஸார் அழைக்கப் படுவர் என, நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின தெரிவித்தார்.

### தரிசனம் நாடி தர்மிஷ்டர் யாத்திரை

முன்னாள்ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன புதன்கிழமை 18ஆம்திகதி பெங்களூருக்குப் புறப்பட்டார். அங்கு அவர் ஒரு வாரகாலம் தங்கியிருந்து சத்தியசாயிபாபாவைத் தரிசிப்பார் என்றும் கூறப்படுகிறது.




‘சற்றடே றிவியூ’வின் சகோதர வாரப் பத்திரிகை

திசை
THISAI

*சந்தா விபரங்கள்:*

(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும். வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

**இலங்கை:**

ஒரு வருடம் - ரூபா; 300/-
அரைவருடம் - ரூபா: 150/-

**இந்தியா:**

ஒரு வருடம் - ரூபா: 350/-
(இந்திய ரூபா)

**சிங்கப்பூர் / மலேசியா**

ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 40

**ஏனைய நாடுகள்**

ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்பிளிக்கேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம். விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெருத, பெ. 122,
யாழ்ப்பாணம்

# கடமையினைப் புறக்கணிக்கும் யாழ். பல்கலைக்கழகம்

திசை (30. 3. 90) இதழில் வெளியான, அணுவும் விண்வெளியும்-20ஆம் நூற்றுண்டில் பௌதிக விஞ்ஞான ஆய்வு என்ற கட்டுரை பாராட்டும்படியாகஅமைந்துள்ளது. அதை எழுதிய கனக. திருச்செல்வம் அவர்கள்விரிந்துபட்ட பார்வையுடன் பௌதிக விஞ்ஞானம் இந்த நூற்றுண்டில் அடைந்த முன்னேற்றங்கள், அவற்றினிடையே விளங்கும் தொடர்புகள், தாக்கங்கள் பற்றிக்குறிப்பிட்டிருப்பது தமிழில் புதுவிதமான ஒரு முயற்சியெனலாம். அவருடைய முன்னைய கட்டுரை (திசை: 8-12-89) போன்றே இதுவும் தத்துவ நோக்கோடு எழுதப்பட்டுள்ளமை நிறைவு தருகிறது.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாகவே மேலைநாடுகள் உயர்ந்த பொருளாதார முன்னேற்றத்தை அடைந்துள்ளன. அந்த வசதிகளைத் தேடியே நாம் அந்த நாடுகளுக்குள் எவ்வாறுவது நுழையப்பார்க்கிறோம். எனினும் நாம் நமது மொழியில் அந்த விஞ்ஞான தொழில் நுட்பம் பற்றி எழுதுவதோ வெகு குறைவு. அதுபற்றிய வெளியீடுகளுக்கு நாம் ஆதரவு வழங்குவதும் குறைவு. விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாகத் தோன்றிய சாதனங்கள், வசதிகளில் நமக்கு வெகு மோகம். ஆனுல் அவை பற்றிய அறிவார்வத்தில் நமக்கு மிகுந்த அசிரத்தை. இந்த இரண்டக நிலை மாற வேண்டும்.



இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டபோது, அது தமிழ் மொழியில் புதிய துறை வளர்ச்சிகளுக்குப் பெருமளவு உதவுமென்ற நியாயமான எதிர்பார்ப்பு இருந்தது. பாரதியார் கூறிய ''மெத்த வளருது மேற்கே-அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை'' என்ற நிலையை மாற்ற பல்கலைக்கழகத்தினர் கணிசமான பங்களிப்புச் செய்வார்களென நம்பினேம். ஆனுல் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான, மருத்துவ பீடத்தினர் தம் தாய்மொழியாம் தமிழுக்காற்றவேண்டிய பணியினை - தம் கடமையினை - இன்றளவும் புறக்கணித்தே வருகின்றனர். தமிழில் தம் கருத்துகளை வெளிப்படுத்தமுடியாத தமிழர்களாகத் தாமிருந்து கொண்டு, தம் பட்டதாரி மாணவர்களையும் அந்நிலைக்கு மாற்றுவதில் அப்பீடத்தினர் வெற்றிகரமாகச் செயற்படுவதாகவே தெரிகிறது.

இங்ஙனம் பல்கலைக்கழகத்தினர் தம் தந்தக் கோபுரங்களிலிருந்து இறங்கி வராத துர்ப்பாக்கிய நிலையில், வெளியிலிருக்கும் அறிவார்வம் மிக்கோர் தாம் கற்ற விஞ்ஞான தொழில்நுட்பம் பற்றிய கருத்துக்களை இயன்றளவு தமிழில் வெளிப்படுத்தவும், அது ஆர்வம் மிக்க தமிழ் வாசகர்களைச் சென்றடையவும் வாய்ப்பு அளிக்கும் ''திசை''க்கு எம் நன்றிகள்.

-சு. மகாலிங்கம்
யாழ்ப்பாணம்.

### பூசி மெழுகுதல் இல்லை

கடந்த 6-4-90 திசையில் எனது 'இயன்றுல் நகுக' சிறுகதையைவெளியிட்டுள்ளீர்கள். 'திசை' யின் துணிவில் நம்பிக்கை வைத்தே இந்தக் கதையை ஒப்படைத்திருந்தேன். குறிப்பிட்ட ஒரு பந்தி நீக்கப்பட்டுள்ளது. கதையின் நோக்கம் திசை திரும்பிவிடும் என்றே அதை நீக்கியுள்ளீர்கள் என்பது புரிகிறது. சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பெண்களின் மன உணர்வை மனதில் கொண்டுதான் அப்படி எழுதியிருந்தேன். ஆயினும் அப்பகுதி நீக்கப்பட்டது தான் பொருத்தமானது.

கதைக்கான ஓவியம் தத்ரூபமானது. நல்லமுறையிலும், சமயம் அறிந்தும் வெளியிட்டமைக்காக எனது நன்றியையும் பெருமகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். 'பூசி மெழுகுதல்' இல்லாமையே எனக்கும் - 'திசை' க்குமான நல்லுறவுக்குக் காரணமாகிறது.

சந்திரா தனபாலசிங்கம்
சண்டிலிப்பாய்.

### ஆச்சரியம்!!

திசையில் பிரசுரமான 'பஜகோவிந்தம்' சிறுகதையானது சில எழுத்தாளர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது. ஏன் இந்தப்பரபரப்பு?

மோசடிகளும் கொடுமைகளும் புரியும் அரசாங்க அதிகாரிகளையும், அரசியல் பிரமுகர்களையும், முதலாளிகளையும், சாதிவெறியர்களையும், தோட்டத்துரைமாரையும் பற்றிக் கதைகளும் கவிதைகளும் எழுதப்படுகின்றன. இதைப் போலவே எழுத்தாளர்களின் மோசடித்தனங்களையும், இரட்டை வேஷங்களையும் பற்றிக் கதைகளோ கவிதைகளோ எழுதப்படலாம்; எழுதப்படவேண்டும்.

சோ. புவனேஸ்வரன்
சுன்னுகம்.

# இலங்கை சிங்களவருக்கு மட்டும் உரியதா?

''ஏன் அவர்களுடைய கடைகளை எரிக்கிறீர்கள்? '' — கூட்டத்தில் நின்ற ஒரு பெண்ணை நான் கேட்டேன்.

''உங்களுக்குத் தெரியாதா? கடந்த இரவு எங்களுடைய 13 இளைஞர்கள் வடக்கில் கொல்லப்பட்டுள்ளனர் '' — அந்தப் பெண் பதிலளித்தாள்.

'' அந்த இளைஞர்கள் இங்கே கொழும்பிலுள்ள தமிழர்களாலா கொல்லப்பட்டார்கள்? '' நான் திருப்பிக் கேட்டேன்.

அவள் ஆத்திரத்தோடு கேட்டாள்; '' நீ ஒரு சிங்களவனு தமிழனு? ''

''நான் ஒரு இலங்கையன்' — நான் பதிலளித்தேன்.

நான் இதைக் கூறிவிட்டு அங்கு நடந்து கொண்டிருந்த சனக்கூட்டத்தின் வெறியாட்டத்திலிருந்து என்னை விடுவித்துக் கொண்டேன். என்னைப் பொறுத்தவரை, ஐக்கியப் பட்ட இலங்கை என்கின்ற எதிர்காலம் கருமை சூழ்ந்த ஒன்றுகவே இருந்தது. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்பவர்கள் தத்தமது இனரீதியான அடையாளங்களை மேவிக்கொண்டு ஒரு பொதுவான இலங்கையர் என்னும் அடையாளத்தின் மூலம் இணக்கமுற முன்வராவிட்டால் இது சாத்தியப்படாது என்றே நினைத்தேன்.

ஆனுல் இச்சிந்தனையில் ஒரு போதாத்தன்மை, ஒரு வலுவின்மை இருப்பது போல் எனக்குப்பட்டது. காரணம் நான் சற்று முன்னர் வெறியாடிக்கொண்டிருந்த கூட்டத்தினர்க்கு, '' நான் ஒரு இலங்கையன் '' என்று பதில் கூறியிருந்தபோதும், நான் ஒரு சிங்களவனுக இருப்பதிலும் அத்தோடு இலங்கைத் தீவுக்கு நான் சொந்தமானவன் என்பதிலும் பெருமை கொண்டேன். ஆனுல் இன்று எனது நாட்டை தமிழ் இளம் கெரில்லா வீரர்கள் பிரிவுபடுத்தும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள் என்பதுவும் எனக்குத் தெரிந்தது. ஆகவே எனது அறிவுசார்ந்தமனம் '' நான் ஒரு இலங்கையன் எனது நாட்டு மக்களுக்கிடையே வேற்றுமையைக் காட்டக்கூடாது '' எனச் சொல்லிக் கொண்ட போதும் எனது உணர்வுகள் வேறுவிதமாக நின்றன.

*யெஹான் பெரேரா*

இலங்கையில் சிங்களவர், தமிழர் முஸ்லிம்கள் போன்ற வேறுபட்டவர்கள் இருந்தபோதும், இலங்கை, சிங்கள பௌத்தர்களுக்குரியதென்னும் நம்பிக்கை எப்படி ஏற்பட்டது? அன்பும் மதிப்பும் ஏனைய இனங்களுக்குக் கொடுபடாமல் எப்படிச் செய்யப்பட்டது?

புத்தர் தனது மரணப்படுக்கையில், சிங்க வம்ச வழி வந்தசிங்களவர்களுக்கே தனது போதனையை இலங்கைத் தீவில் பாதுகாக்கும் பொறுப்பை விட்டுச் சென்றதாக வரும் புராண ஐதீகத்தைச் சிங்களவர்கள் நம்புகிறுர்கள். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் ஏனைய இனங்கள் பிறத்தியார்களாக அவர்களால் கொள்ளப்படுகிறது.

இதனுல் தமிழர் இலங்கையில் பலவிதங்களில் பாரபட்சம் காட்டப்பட்டனர். விளைவு இரண்டு இனத்தவரும் ஒருவரை ஒருவர் வெறுத்துப் போரிட்டனர். ஆனுல் இன்று இனப் பிரிவினைவாதத்தில் சிக்குண்டு போராடும் நாம், இந்தியாவில் நிலவிய சாதிப்பாகுபாட்டுக்கு எதிராக எவ்வாறு புத்தர் போராடினுர் என்பதை மறந்து விட்டோம். ஒருவன் பிறப்பால் பிராமணனுகவோ தீண்டத் தகாதவனுகவோ வருவதில்லை. அவனது நடத்தை மூலமே இது ஏற்படுகிறது. இதிலுள்ள மனித இனத்தின் மேன்மைக்குத் தேவையானதை நாம் எடுத்துக் கொள்ள முடிந்தால் எவ்வளவோ நன்மை பயக்கும்.

தனிப்பட்ட, பாதுகாப்பற்ற நிலையிலேயே தனிமனிதனும் சரி, மனிதக் கூட்டமும் சரி ஒன்றேடு தன்னை இணைத்துக் கொள்கிறது. அது நியாயமானது. ஆனுல் ஒருஇனத்துடனே ஒரு கூட்டத்துடனே எமது சொந்தத்தைத் தொடர்பு படுத்திக் கொள்ளும் நாம், அதற்காக அடுத்த கூட்டத்தையோ இனத்தையோ அப்புறப்படுத்த வேண்டுமா?

ஒன்றுக்குச் சொந்தம் பாராட்டுவது என்பது ஒரு மனேநிலை. ஆகவே நான் எனது சொந்தம் என்னும் தொடர்பை ஏன் இலங்கையோடு — குறிப்பாகச் சிங்கள இனத்தோடு வைத்துக் கொள்ள வேண்டும்? ஏன் தமிழரோடு அல்லது அமெரிக்காவோடு — (அங்கே நான் கனகாலம் வாழ்ந்தவன்) வைத்துக் கொள்ளக் கூடாது? இதற்கெதிராகப் பல காரணங்களை நான் காட்டலாம். ஆனுல் எனது மனம் திருப்திப்படுவதாய் இல்லை. காரணம் கடவுளே குடும்பம் என்ற பார்வையில் நாம் சகலரும் அதனேடு தொடர்பு பட்டவர்களே! □



''சிறுகச் சேர்த்துப் பெருக வாழ்வீ''

செல்லப்பிள்ளை உங்களுக்கு கைவிசேசமாக
வெள்ளிப் பணம் அள்ளித்தருவார்கள்
சுட்டிப்பயலாக இருந்துவிட்டாலோ
கெட்டித்தனமாக உண்டியலில் சேர்த்துவிடுவீர்கள்
உண்டியலும் நிரம்பி விட்டால்
வங்கியிலே ஒரு கணக்கு
உங்கள் பெயரிலே
ஒளிமயமான எதிர்காலத்திற்கு
இன்றே சேமியுங்கள்
அழகிய உண்டியல் ஒன்றை உங்களுடையதாக்கி—
மில்க்வைற் மேலுறையிலிருந்து 100 திருக்குறள்களை
நேரில் கொண்டு வாருங்கள்.

**மில்க்வைற்**

யாழ்ப்பாணம்.

## சமூக விஞ்ஞானச் சுடர்

சமூக அறிவியல் மாணவர்களினதும் சமூக விவகாரங்களில் நடைமுறை ஈடுபாடும் திறனய்வு மனப்பான்மையும் உள்ளோர்களினதும் அறிவு வளர்ச்சிக்குத் துணை புரியக்கூடிய முறையில், 'சமூக விஞ்ஞானச் சுடர்' என்ற சமூக அறிவிதழ் வெகுவிரைவில் வெளிவரவிருக்கிறது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள 'சமூக விஞ்ஞான வெளியீட்டகம்' இதற்குரிய ஆயத்தங்களைச் செய்து வருகிறது.

# மார்க்சியமும் பெண்நிலைவாதமும்: சில பிரச்சினைகள்

□ வ. கீதா □

*சென்ற வாரத் தொடர்ச்சி*

### *சீனாவிலும் ரஷ்யாவிலும் புரட்சியின் பின்பும்*

சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட முதலாளிய உற்பத்தி முறை, இச்சுரண்டலை நியாயப்படுத்தும் பூர்ஷ்வா சமூக மற்றும் பண்பாட்டு மேலாண்மை, சமூக பேதங்களைக்கட்டிக் காக்கும் அதிகாரத்துவ அரசு, இவை அனைத்தும் ஒழிக்கப்பட்டு ஒரு புரட்சிகர சமுதாயம் அமைக்கப்படுவதால், பெண்ணடிமை நிலைகளும் உடனுக்குடன் மாறியமைந்து விடும் என்று பெண்நிலைவாதிகள் கருதுவதில்லை. சோவியத் யூனியனிலும் சரி, செஞ்சீனத்திலும் சரி- புரட்சிக்குப் பின் இயற்றப்பட்ட அரசியல் சாசனங்களில் பெண்ணுரிமைக்கான, பெண்விடுதலைக்கான உத்தரவாதங்கள் புகுத்தப்பட்ட போதிலும், நடைமுறை அளவில் இவ்வுத்தரவாதங்கள் பெண்களுக்குச் சாதகமாக அமைந்து உதவவில்லை. புரட்சிக்குப் பிந்திய சோவியத் யூனியனில், குறிப்பாக ஸ்டாலின் ஆட்சிக்கு வந்த பின்னர், பெண்களின் இரட்டைச் சுமை அதிகரிக்கவே செய்தது. சீனாவின் பண்பாட்டில் ஊறிப் போயிருக்கும் ஆணாதிக்க உணர்வுகள் புரட்சிக்குப்பின் மறைந்து விடும் என்ற நம்பிக்கை இன்று பொய்யானநம்பிக்கையாகவே விளங்குகிறது. இன்றும்,சீனாவில் பெண் சிசுக்கொலைகள் நடைபெறுகின்றன. சீனக் கலாசாரப் புரட்சிக்குப் பின் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை, ஆணாதிக்கம் விரவிக் காணப்படும் உற்பத்தி அமைப்புக்களின் (இவை கூட்டுறவு அமைப்புக்களாலும்சரி, தனிப்பட்டமுறையில் உற்பத்தியை மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்று இயங்கும் கூட்டுக்குடும்ப அமைப்புகளானாலும் சரி) பொருளாதார, மற்றும் சமூகக் கட்டளைகளுக்குப் பெண்களைப் பணிய வைத்தன.

### *புரட்சியின் பின்னரும் மாற்றங்கள் ஏன் இல்லை?*

புரட்சி வெடித்த நாடுகளில் பெண்களின் வாழ்வில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படாதமைக்குக் காரணம் என்ன? பெண்நிலைவாதிகள் கூறுவர்: மார்க்சியர்கள் பெண்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கானகோட்பாட்டு வாதங்களை வளர்த்தெடுக்க முயலவில்லை. பெண்நிலைவாத ஆய்வுகளைப் பின்பற்றி மார்க்சியத்தைச் செழுமைப்படுத்த விரும்பிய இடதுசாரிகளுங்கூட, கல்விசார் மார்க்சியராகவே இருந்துள்ளனர். இவர்களின் புரிதல்கள் மார்க்சியக் கட்சிகளின் செயல்முறையில் மாற்றங்களைஏற்படுத்தஉதவவில்லை. தவிரவும் தாம் எதிர்கொள்ளும் யதார்த்தச் சூழலிலிருந்தும்கூட படிப்பினைகள் பெற, மார்க்சியர்கள் முன்வரவில்லை. புறவுலகில் தாம் கண்டவற்றைத் தமது மார்க்சிய சூத்திரங்களுக்கு இவர்கள் குறுக்கப்பழகினரே தவிர, புறவுலகின் முரண்பாடுகளின் அடிப்படையில் தமது அறிவை வளர்த்தெடுக்க இவர்கள் முனையவில்லை. உதாரணத்திற்கு ''குடும்பம்'' பற்றிய மார்க்சியப் பார்வையை நாம் எடுத்துக் கொள்வோம்:பெண்நிலைவாத மானுடவியலாளர், சமூகவியலாளர், ஏன் சில கல்விசார் மார்க்சியர்கூட குடும்பத்தைப்பற்றி பல செய்திகளைத் தமது நுணுக்கமான ஆய்வுகளின் மூலம் திரட்டியுள்ளனர். குடும்பம் என்பதற்கு தனியொரு வரலாறு உண்டு. அது தன்னை மறு உற்பத்தி செய்து கொள்ளும் முறை, சமூகத்தின் உற்பத்தி முறையுடன் சிக்கலான முரணான உறவைக் கொண்டுள்ளது. குடும்பத்தில் நிலவும் உறவு முறைகளை, பாலுணர்வைப் பற்றிய உளவியல் ஆய்வுகளைக் கொண்டு நாம் வரையறுக்க இயலும்— இம்மாதிரியான விவரங்கள்கொண்டு குடும்பத்தைப் பற்றிய தமது புரிதல்களை மார்க்சியரால் மறுவரையறை செய்திருக்க முடியும். மறுவரையறை செய்யப்பட்ட புரிதல்கள் யதார்த்தத்தில் நிகழும் பெண்களை இலக்காகக் கொண்ட பலவித வன்முறைச் செயல்களுக்கெதிராக, மார்க்சிய அரசியல் நிலைப்பாட்டை வலுவடையச் செய்ய உதவியிருக்கும். ஆனால் பெண்நிலைவாதத்தின் படிப்பினைகளை இடதுசாரியினர் கோட்பாட்டளவிலும், நடைமுறையளவிலும் ஏற்றுள்ளதாக நமக்குத் தெரியவில்லை. குடும்பம் என்ற அமைப்பினை உற்பத்தி முறையுடன் மட்டும் பொருத்திப் பார்த்துப் பழகிய மார்க்சியர்கள் குடும்ப அமைப்பிற்கேவுரிய ஆதிக்க உறவுகளை, ஆணாதிக்க உறவுகளை,''தனிமனிதப்'' பிரச்சினைகளாக ஒதுக்கிவிடுகின்றனர். இதனால், குடும்ப உறவுகள் எவ்வாறு பொது உலகிலும் தம்மைப் பிரதிநிதித்துவம் செய்து கொள்கின்றன என்பதைஇவர்கள் காண்பதில்லை. இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் அரசின் தன்மை எவ்வாறு தந்தைமைக் குடும்ப அமைப்புகளின் தன்மையை ஒத்ததாக உள்ளது; அரசின் பார்வையும் ஒரு ஆண்பார்வையே என்பன போன்ற விமர்சனங்களை முன்வைக்க, மார்க்சியர்கள் தவறிவிடுகின்றனர். தவிரவும், மார்க்சியக் கட்சிகளுங்கூட தந்தைமை அமைப்புகளுக்கேவுரிய அதிகாரத்துவத்தைக் கொண்டு இயங்குவதையும் இவர்கள் காணத் துணிவதில்லை. இந்த வகையில் பெண்நிலைவாதிகளின் பகிரங்கமான விமர்சனங்கள் மார்க்சியர்களைச் சென்று அடைந்ததாக நமக்குத் தெரியவில்லை.

### *சொந்த விஷயங்களும் அரசியல்தான*

மார்க்சியத்தை, மார்க்சியர்களை பெண்நிலைவாதிகள் விமர்சிக்கும் போதிலும் இடதுசாரி அரசியலையோ, மார்க்சியப் புரிதல்களையோ அவர்கள் நிராகரிப்பதில்லை. பெண்நிலைவாதிகள் ஆட்சேபனை தெரிவிப்பதெல்லாம் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வர்க்கப் போராட்டத்திற்கோ, வேறு எந்தவொரு போராட்டத்திற்கோ குறுக்கிவிடுவதைத்தான். சொந்த விஷயங்களாகக் கருதப்படுபவையுங்கூட உண்மையில் அரசியல் பிரச்சினைகள்தான் (Personal is political) என்ற புரிதலின் அடிப்படையில் பெண்நிலைவாதிகள் ஆணாதிக்கத்தை எதிர்த்துத் தமது உரிமைப் போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். இந்த வகையில், ஒரு பெண்ணுக்கு இழைக்கப்படும் எந்தவொரு அநீதியையும் ஒரு பொதுப்பிரச்சினையாக்கிப் போராட பெண்நிலைவாதிகள் பழகிவிட்டனர். நாம் முதலில் குறிப்பிட்ட மஉறாராஷ்டிரா சம்பவத்தையே எடுத்துக்கொள்வோம். பெண்நிலைவாதிகளும், பெண்கள் அமைப்புகளும், சம்பந்தப்பட்ட கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிடம் கட்சித் தொண்டர்களின் நடத்தையைப் பற்றிப் புகார் செய்தபோது கட்சித் தலைமை, அந்தப் பலாத்காரச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் தம்மைச் சார்ந்தவர் அல்லர் என்று கூறிவிட்டது. இது போதாதென்று, பலாத்காரத்தைக் கண்டனம் செய்து தனியொரு அறிக்கையை வேறு வெளியிட்டது!

கொம்யூனிஸ்ட் கட்சியின் இந்த நிலைப்பாடு பெண்நிலைவாதிகளுக்கு அதிர்ச்சியூட்டியது மட்டுமல்ல, மார்க்சியரிடத்தும் ஆணாதிக்க, பெண்விரோத உணர்வுகள் இருக்கக்கூடும் என்பதை அவர்களுக்கு நினைவூட்டவும் செய்தது. ஒரு ஏழைப் பெண்ணோ, கீழ்ஜாதிக்காரியோ பலாத்காரத்திற்கு உள்ளாகும் போது, அது ஒரு பிரச்சினையாக்கப்படும். ஆனால் அவள் ஒரு கொம்யூனிஸ்ட் கட்சியால் - ஆனால் அவள் ஒரு நடுத்தர வர்க்கப் பெண்ணாக இருந்து விட்டால் — அதுவும் குற்றவாளிகள் தமது கட்சியினராக இருக்கக் கூடும் என்ற நிலை இருந்தால் — கொம்யூனிஸ்ட் கட்சியினால் அது பலாத்காரந்தான் என்று ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. காரணம், பலாத்காரத்தை அவர்கள் ஒரு ஆணின் வன்முறைச் செயலாகப் பார்ப்பதில்லை. வர்க்கவுணர்வுகளின் முரண்களின் அதீத வெளிப்பாடாகத்தான், பலாத்காரத்தை அவர்கள் காண்கின்றனர். தமது கட்சியினரும் இக்குற்றத்தைச் செய்யக்கூடும் என்ற எண்ணம், அவர்களைச் சலனப்படுத்தியதில்லை. இந்த மாதிரியான விஷயங்களில் மார்க்சியர் சுயவிமர்சனம் செய்து கொள்வதுதான் அறம்.

கிளாஸ்நோஸ்ட் காலம்இது. சோசலிசப் பன்மைவாதம், சுற்றுச்சூழல் சோசலிசம் என்பன போன்ற கருத்துக்கள் உலகெங்கும் விவாதிக்கப்பட்டு வருகின்றன. ஒரு பெண்நிலைவாத சோசலிசம் உருவாகுவதற்குக் காலம் கனிந்துவிட்டதென்று நாம் கொள்ளமுடியுமா? □




# கிமா எடுத்த படங்களின் கதைகள்

சென்னைக்குச் சென்றவர்களுக்கு மூர்மார்க்கட் தெரிந்திருக்கும். அங்கு எல்லாப் பொருட்களும் கிடைக்கும். காருடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு பஞ்சிகாவத்தை பரிச்சயமாகவிருக்கும். பஞ்சிகாவத்தையில்காரின்உதிரிப்பாகங்கள் எல்லாமே கிடைக்கும். அதைப் போன்றே ஆபிரிக்க நாடான நைஜரிலும் ஓர் மார்க்கட் உண்டு. அதன் பெயர் புகோகி.

மூர்மார்க்கட்டுக்கும் பஞ்சிகாவத்தைக்கும் புகோகிக்கும் போகிறவர்கள், அங்கு அந்தப் பொருட்கள் எப்படி வருகின்றன என்பதை ஆராய்வதில்லை ஆனல் மாரியமா கிமா அந்த ஆய்வை நடத்தினர்.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் டிப்புளோமாப் பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருந்த கிமா, புகோகி மார்க்கட்டிற்குப் பொருள்கள் எப்படி வருகின்றன, எங்கிருந்து கொண்டு வரப்படுகின்றன என்பதை ஆராய்ந்த கதையும் சுவையானது. பரீட்சைக்கு ஒரு வீடியோப் படம் ஒன்றைத் தயாரித்துக் கொடுக்கவேண்டிய தேவை அவருக்கு இருந்தது. அந்தச் சூழ்நிலையில் தான் புகோகி சந்தைக்கு ஒரு பின்னேரம் போனர். சந்தைக்கு முன்னல் ஒரு மோசமான கார் விபத்து. சொந்தக்காரர் காரை அங்கேயே விட்டுவிட்டுப்போய் விட்டார். ''நாளைக் காலையில் இந்தக் காரின் துரும்புகூட மிஞ்சியிருக்காது'' என்று யாரோ சொன்னது காதில் விழுந்தது. அங்கேயே தங்கியிருந்து என்ன நடக்கிறது என்று அவதானிக்க கிமா முடிவு செய்தார்.

அவர்கள் சொன்னதைப் போலவே கார் மறைந்தது. துண்டுதுண்டாக ஒருவன் சில்லுகளைக்கழற்றிச்சென்றான். அவற்றிலுள்ள டயர்களைக் கழற்றி வேறொருவனுக்குக் கொடுத்தான். அவன் அதைத் துண்டு துண்டாக வெட்டி செருப்புக்களாக்கினன்.

இதுதான் கிமாவின் கன்னிப் படத்தின் கதை.

பழைய பொருட்களிலிருந்து புதிய பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில், ஆபிரிக்காவிலுள்ள நைஜர் நாட்டில் மிகவும் சிறிய அளவிலே தான் ஆரம்பித்தது. இன்று அது மிகப் பெரிய கைத்தொழிலாகவளர்ந்துவிட்டது. ஆயிரக்கணக்கானமக்கள் அத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். புகோகி சந்தையைச் சுற்றியே அக் கைத்தொழில்வளர்ந்துள்ளது.

அது திட்டமிட்டு, ஒழுங்கு முறைப்படி நடத்தப்படும்தொழிலல்ல. அதிகமாக, எல்லாரும் தனித்தனியே, தனக்குத் தானே வேலை செய்கிறர்கள். அதிகமாக, ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட செயல்முறையில் தேர்ச்சி பெற்றுள்ளனர். உதாரணமாக, விபத்துக்குள்ளான காரிலிருந்து டயரைக் கழற்றி எடுத்தவர் அதை செருப்புக்கு அளவான துண்டுகளாக வெட்டி இன்னொருவனுக்கு விற்பார்.அவர் அதில் பட்டிகளை வைத்துத்தைப்பார். இப்படியே பல கைகள் மாறிய பின்புதான் அது செருப்பாக விற்பனைக்கு வருகிறது.

கிமாவின் படத்திற்குநல்ல வரவேற்புக் கிடைத்தது. நைஜர் நாட்டின் தொலைக்காட்சியினர் அதைக் காட்டினர். வேறு படங்களை எடுப்பதற்கும் தொலைக்காட்சிக் கமராவைக் கொடுத்துதவினர். தனது இரண்டாவது, வெற்று கொக்கோ கோலா தகரங்களிலுள்ள அலுமினியத் தகட்டை எப்படி சட்டிகளாகவும் பானைகளாகவும் மாற்றி அமைகின்றனர் என்ற கதையைக் கிமா தெரிந்தெடுத்தார்.

அவருடைய மூன்றுவதுபடம் ''தோகோ'' என்பது. 'தோகோ' என்றுல் எண்ணெய்த் தகரத்தை என்று பொருள். சுத்தியல்,உளிபோன்றவற்றின் உதவியுடன் எவ்வாறு எண்ணெய்த் தகரத்தின் இருமுனைகளையும் வெட்டி எடுத்து நடுப்பகுதியை அடித்து நீள்சதுரத் தகடுகளாக ஆக்குகின்றுர்கள் என்பதைக் காட்டுவதுடன் நிகழ்ச்சியை ஆரம்பித்தார், கிமா.பின்பு அத்தகட்டிலிருந்து பல்வேறு பொருள்களை அவர்கள் செய்யும் முறையைக் காட்டினர்.

எண்ணெய்த் தகரங்களை டிரங்குப் பெட்டிகளாக மாற்றினர்கள் சிலர். அதைக் கொண்டே விறகைச் சேமிக்கும் அடுப்புக்களை உருவாக்கினர்கள் வேறு சிலர். கூரைத் தகடுகள் கூட அவற்றிலிருந்து தயாரிக்கப்பட்டன.

கிமாவின் படங்கள் ஒகடுகோ, லண்டன், வியன்ன,

(11ஆம் பக்கம் பார்க்க)

# இ. தொ. கா. பொன்விழா : ஒரு வெட்டுமுகம்

மார்ச் மாதம் 24ஆம், 25ஆம் தேதிகளில் அட்டன் நகரம் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. சுற்றுப்புற நகர்களான வட்டகொடை தலவாக்கொல்லை, டிக்கோயா, கொட்டகலை என்பவைகளும் தம்மை அலங்கரித்துக்கொண்டிருந்தன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது 50 ஆவது ஆண்டு நிறைவை - பொன்விழாவாகக் கொண்டாடியதே இதற்கான காரணமாகும். 24ஆம் தேதி இந்துமகாசபையில் பேராளர் மாநாடும் 25ஆம் தேதி டன்பார் விளையாட்டுத் திடலில் பொது மாநாடும் விமரிசையாக நடைபெற்றன.

இந்த மாநாடு சென்ற ஆண்டு ஒகஸ்டில் நடைபெற வேண்டியது. 1939 ஜுலையில் ஆரம்பிக்கப்பட்ட இ.தொ.கா. ஐம்பதாண்டு பூர்த்தியான கையோடு மிகப் பெரும் விழாவுக்குத் திட்டமிட்டிருந்தது. நாட்டில் நிலவிய அமைதியின்மையும், அச்சுறுத்தும் சூழலும் திட்டத்தைத் தள்ளிப் போடவைத்தது.

இந்த நிலைமையில் தற்போது அட்டனில் நடைபெற்ற பொன்விழா மலையக மக்களிடையே புதிய நம்பிக்கைக்கு வித்திட்டுள்ளது; புதிய எதிர்பார்ப்புக்களுக்கு வழி வகுத்துள்ளது.

## சவால்களை நோக்கி

இ.தொ.கா.வின் மூவர்ணத்திலமைந்த சாரிகளை அணிந்த ஆயிரக்கணக்கான பெண்களும், அதே வர்ணத்திலமைந்த தொப்பிகளணிந்த ஆயிரக்கணக்கான ஆண்களும் ஊர்வலத்தில் பங்கேற்றுக் கொண்டமை பார்க்க பரவசமூட்டியது. ஊர்வலத்தில் இடம்பெற்ற அலங்கார ஊர்திகளும், அணிவகுத்துச் சென்றோர் தூக்கிச் சென்ற பதாகைகளும், அவர்கள் எழுப்பிச் சென்ற முழக்கங்களும் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கிற சவால்களை எதிர்நோக்குவதற்கு இவர்கள் தயார் பண்ணப்படுகின்றதை வெளிப்படுத்தியது.

## பல்வகை மக்கள்

ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் நாட்டின் நாலாபக்கத்து மக்களுமாவர். இ. தொ. கா. வழக்கமாக, இதுவரை நடாத்திய இது போன்ற மாநாடுகளில் இந்திய வம்சாவழியினர் மாத்திரமே பங்கேற்றிருந்தனர். இந்தமுறை இதில் குறிப்பிடத்தகுந்ததொரு மாற்றம் தெரிந்தது. தோட்டத்து உத்தியோகத்தர்கள், நகர்ப்புற ஆசிரியர்கள், கொழும்பு நகரத்து தனியார் நிறுவன ஊழியர்கள் என்ற பலதரத்தினர், இலங்கையின் எல்லா இனத்தவரையும் உள்ளடக்கியவர்களாக ஊர்வலத்தில் காணப்பட்டனர்.

சந்தைச் சந்தியில் பிரமாண்டமான அளவில் ஜனாதிபதி பிரேமதாஸவினதும், தலைவர் தொண்டமானினதும் உருவங்களடங்கிய 'கட்டவுட்'கள் வைக்கப்பட்டிருந்தன.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பென்றால் இ.தொ.காவின் தொண்டர் படையினர் ஆளுயர கம்பம் தாங்கி சிலம்பு சுழற்றும் வீரர்களாக ஊர்வலத்தில் அணிவகுத்து நிற்பதைக் காணலாம். இந்த முறை 10.30 மணிக்கு ஊர்வலம் டன்பார் திடலை வந்தடைந்தபோது, பொலிஸ்காரராக, கிராம சேவகராக, ஆசிரியராக அரசாங்கத்துறையில் பணியாற்றும் தோட்டத் தமிழர்களைக் காண முடிந்தது. இது இயற்கையாகவே அரசாங்கத் துறையிலிருந்து இந்திய வம்சாவழியினர் அகற்றப்பட்ட காலகட்டத்தையும் நினைவுபடுத்தியது.

## தொண்டமானும் செல்லச்சாமியும்

பொன் விழாவுக்கான நோட்டீஸ் மலைநாட்டின் எல்லா நகர்ப்புறங்களிலும், ஒட்டப்பட்டிருந்தது; தோட்டங்கள் தோறும் விநியோகிக்கப்பட்டிருந்தது.

தலைவர் தொண்டமான் படம் மாத்திரமே இவைகளிலே அச்சிடப்பட்டிருந்தது. 'படையெனத் திரண்டு வாரீர்' என்று மக்களை அழைக்கும் வாசகங்கள் இதில் காணப்பட்டன.

மாநாடு நடைபெற்ற அட்டன் நகரில் மாத்திரம் இன்னொரு விளம்பரத்தையும் கூடவே காணமுடிந்தது. இளம் மஞ்சள் வர்ணத்தில் பிரகாசித்த இந்த நோட்டீசில் பொதுச்செயலர் செல்லச்சாமியின் படம் மாத்திரமே அச்சிடப்பட்டிருந்தது. 'அடிமை விலங்கொடித்த பாட்டாளிகளைப் புதுயுகம் காண' அழைக்கும் வாசகங்கள் இதில் காணப்பட்டன. சுதந்திரமாக சிறகடித்துப் பறக்கின்ற பறவைக் கூட்டத்தையும், இரண்டு பெரிய பறவைகள் இரண்டு வரிசையில் அந்தப்பறவைக் கூட்டத்தினை இட்டுச் செல்வதையும் காட்டும் சித்திரம் பலரது கவனத்தையும் ஈர்த்தது.

## அதிருப்தி

மாநாட்டின்போது சுற்றுப்புறத் தோட்டங்களிலும், உள்ளூர்களிலும் இருந்து வந்திருந்தவர்களைவிட, தொலை தூரத்திலிருந்தவர்களே ஆயிரக் கணக்கில் காணப்பட்டனர். அவர்களின் ஆர்வத்துக்கும், துடிப்புக்கும் மாநாட்டு அமைப்பு முறைகள் திருப்தி அளிக்கவில்லை. அவர்களில் ஒரு சிலர் பேராளர் மாநாடு நடந்த 24ஆம் தேதியே அட்டன் இ.தொ.கா. அலுவலகத்து முன்றலில் தங்கள் அதிருப்தியை சாத்வீகமான முறையில் வெளிப்படுத்திவிட்டனர்.

## இலங்கை அரசியல். தலைவர்கள்

இ.தொ.கா. நடாத்தும் மாநாடுகளில் முன்பெல்லாம் இந்தியத் தலைவர்கள் மாத்திரமே கலந்து கொள்வர். இந்த முறையும் திருமதி அனந்தநாயகிவந்திருந்தார். இந்தமுறை அவரது வருகைக்கு அரசியல் காரணங்களைவிட, தொண்டமான் குடும்பத்தாரோடு ஏற்பட்ட உறவுமுறை காரணமாக அமைந்தது என்றே படுகின்றது.

இலங்கை அரசியல் தலைவர்களும், ஆட்சித் தலைவரும் இது போன்ற மாநாட்டில் கலந்து கொள்ளும் அரசியல் நாகரிகத்தை(தந்திரத்தை) முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆரம்பித்துவைத்தார்.

இந்தமுறை மாண்புமிகு ஜனாதிபதி பிரேமதாஸ அவர்கள் தமது அமைச்சரவையில் உள்ள காமினி திசநாயக்க, ரஞ்சன் விஜேரட்ண, ரேணுகா ஹேரத் ஆகியோருடன் சேர்ந்து கலந்து கொண்டார்.

கூட்டத்தினர், அவர்களைக் கண்டபோதும், அவர்களின் பேச்சுக்களைக் கேட்டபோதும் காட்டாத மகிழ்ச்சி ஆரவாரத்தை அவர்கள் தமிழில் பேசியபோது காட்டினர்.

இந்தியத்தூதுவர் லால்மெஹ்ரோத்ரா ''வணக்கம்'' என்று தமிழில் கூறி தனது பேச்சை முடித்த போதும், ''அடுத்த முறை வரும்போது தமிழில் பேசுவேன்'' என்று தமிழில் ஜனாதிபதி அறிவித்த போதும், மக்கள் வெள்ளம் கரகோஷம் செய்தது. அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண தமிழிலேயே பேசி ஓர் ஆரோக்கியமான சூழலைத் தோற்றுவித்தார்.

''ராலஹாமியைக் கண்டால் ஓடி ஒதுங்குபவர்களாக இருந்த நீங்கள், இப்போது உங்கள் காம்பராக்களுக்குள் ராலஹாமியைப் பார்க்கின்றீர்கள்'' என்று, மக்களின் ரசனைக்கேற்ற விதத்தில் பேசினார்

## பெண்களுக்கு முக்கியத்துவம்

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவியாகச் செயல்பட்டவர் பெண் தொழிலாளியான செந்தமிழ்ச்செல்வி என்ற இருபத்தேழுவயது நிரம்பிய பெண். இதுவும் மாநாட்டுக்கான விளம்பரங்களிலும், பத்திரிகைச் செய்திகளிலும் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டிருந்ததைக் கவனிக்கமுடிந்தது.

□ இந்திரஜித் □

மலையகத்தில் ஆண்களைவிட பெண்கள் தொழிற்சங்க வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளார்கள் என்பதை தலைவர் தொண்டமான், சென்ற மாநாடு 'கண்டியில் நடந்தபோது, பேராளர் மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார். அவர்களின் பங்களிப்புக்குக் கௌரவம் தருவது போல் பொன் விழா ஏற்பாட்டில் பெண்களுக்கு முக்கியத்துவம் இந்தமுறை கொடுபட்டிருந்தது.

## செலவு 35 லட்சம்

இந்த மாநாட்டுக்கென லட்சக்கணக்கில் பணம் செலவழிக்கப்பட்டுள்ளது (முப்பத்து ஐந்துலட்சம் என்று சிலர் கூறுகின்றனர்). எனவே இதனால் ஏற்படுகின்ற பலாபலன்களையும்—மலையகத்தின் இன்றைய அரசியல் நிலைமைகளில் ஒரு திருப்புமுனையாக அமையும் என்று எதிர்பார்த்திருந்தது எந்த அளவுக்கு வெற்றியளித்துள்ளது என்பதையும் ஆராய்வது, பயனுடையது.

## இ தொ, காவுக்கெதிரான குற்றச்சாட்டுகள்

இ,தொ.காவின் அரசியல் சிந்தனைகளிலும், செயல்பாடுகளிலும் இன்றைய தலைமுறையினர் அதிருப்தி கண்டுள்ளனர். படித்தவர்களை இ. தொ. கா. அலட்சியப்படுத்துவதும், பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டமும், தகுதியுள்ள இளைஞர்களை வளரவிடாமையும், ஊழல்களும் இ. தொ. கா. வுக்கு எதிராக எழுப்பப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்களாகும். இவைகளுள் மிகப்பல இ.தொ.கா. வின் நிர்வாகத்திலிருந்து செயல்பட்டு வெளியேவந்திருப்பவர்கள் தந்த தகவல்களையொட்டிப் பரப்பப்பட்டு வளர்க்கப்படும் கருத்தோட்டமாகும்.

எனவே, அரசியல் நடவடிக்கைகள் இந்த மக்களுக்குப் பயன் தருவதாக அமைதல் வேண்டும்.

சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், நடைமுறைப்படுத்தப்படாத உரிமைகளுக்காக வடகிழக்கில் தமிழர்கள் உரிமைப் போராட்டம் இன்னும் நடாத்துகின்றனர். இலங்கையர்களாக—இந்திய வம்சாவழி மக்கள் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், நடைமுறையில் இலங்கையர்களாக அவர்கள் உரிமைகளை இனிமேல்தான் அநுபவிக்கப் போகின்றார்கள்.

அந்த மக்களின் எதிர்பார்ப்புக்கள் அநேகம். அவைகளை நிறைவேற்றி வைப்பதில் இ. தொ. கா. ஆற்றிடவேண்டிய பங்களிப்பு அதிகம்.

'நான் என்ன செய்யப் போகின்றேன் என்பதைக் கூற மாட்டேன்; செய்தபின் பார்க்கப் போகிறீர்கள் என்று மாநாட்டில் கூறிய ஜனாதிபதி பிரேமதாஸ அவர்களின் கூற்று பொருள் பொதிந்த ஒன்று.

அதே மாநாட்டில் 'லயக் காம்பரா' வாழ்க்கையை இல்லாதொழிப்பேன் என்று கூறிய அமைச்சர் காமினி திசநாயக்கா, இன்று அமைச்சரவையிலேயே இல்லை. எனவே ஆட்சியாளர்களின் வாக்குறுதிகளை மாத்திரம் நம்பி எதிர்காலம் சிறப்பாக அமையும் என்று எதிர்பார்க்க முடியாது.

## இன விகிதாசாரம்

இன விகிதாசார அடிப்படையில் இனி தொழில் வாய்ப்புக்கள் அமையும் என்று ஆட்சியாளர்கள் அறிவித்துவிட்டார்கள். இந்திய வம்சாவழி இலங்கையரின் உத்தியோக பூர்வமான விகிதாசாரம் 5.5 என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைச்சனத்தொகையில் 16 சத வீதத்தினராயிருந்து வந்த இந்த மக்கள், அரசியல் கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்கவும், இனக் கலவரத்தில் உயிர்தப்பவும் வேண்டியிருந்தது. கலப்பு மணம் புரிந்து கொண்டு தம்மைப் புதிய பகைப்புலத்தில் இனம் காட்டிக் கொண்டவர்களும்; குடியுரிமை பெற்று தேர்தல்களில் வாக்களித்த உரிமையினால் தம்மை வம்சாவளி இலங்கையர் எனக் கூறிக் கொண்டவர்களும் இருக்கின்றார்கள். எனவே எதிர்காலத்தில் இந்திய வம்சாவளியினரின் இன விகிதாசாரத்தில் அமையப்போகும் தொழில் வாய்ப்புக்கள் நடைமுறைச் சிக்கல்களைத் தோற்றுவிக்க இருக்கின்றன. மாநாட்டில் அமைச்சர் தொண்டமான் தனது பேச்சில் இதைத் தொட்டுக் காட்டத்தவறவில்லை.

தோட்டப்பகுதி நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படும்போது இந்த இன விகிதாசாரம் நடைமுறைப்படுத்தப்படும் அபாயமிருக்கின்றது.

## வரலாற்று நூல் இல்லை

இத்தனை ஆர்ப்பாட்டத்தில் செய்யப்பட்ட பொன்விழா ஏற்பாட்டில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வரலாற்றைக் கூறும் ஆவணமாக ஒரு நூல் வெளியிடப்படாதது, மிகப் பெரிய குறையாகும்.

இ. தொ. கா.வின் முழு வரலாறு தெரிந்தவர்கள் இன்று இ. தொ. கா. விலேயே இல்லை. பழைய சம்பவங்களை, அவர்களுக்குத் தலைவர் எஸ். தொண்டமான் அவர்களே நினைவுபடுத்தவேண்டியிருக்கின்றது. அந்த நினைவுபடுத்துதலும்கூட சிலசமயங்களில் வேறுபட்ட தகவல்களாகவும், மிகைப்படுத்தப்பட்ட தகவல்களாகவும்அமைந்திருப்பதைக் காணலாம். 50 வருட பொதுவாழ்வில் இப்படி நடப்பதென்பது இயல்பான ஒன்றே.

இந்தியா திரும்பியவுடன் தனது தென்னாபிரிக்க அநுபவங்களை நினைவு கூர்ந்து எழுதிய மகாத்மா காந்தியின் சுயசரிதையில் இவ்விதம் தவறு நேர்ந்திருப்பதை, அவரே ஒத்துக் கொண்டுள்ளார்.

## முரணான தகவல்

அட்டனில், இதே டன்பார் மைதானத்தில் 1949இல் நடந்த மகாநாட்டில்தான் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் தாங்கள் விண்ணப்பிப்பதில்லை என்று தீர்மானித்ததாக, தலைவர் தொண்டமான் தனது அறிக்கையில் (20/ 03/ 1990) வீரகேசரி) கூறியிருக்கின்றார். அந்த மாநாட்டுக்கு இந்தியத் தலைவர்களான அசோக்மேத்தா, ம. பொ. சிவஞானம், ஆசாரியா கிருபளானி எல்லாம் வந்திருந்தார்கள்.

இதே கருத்தை வலியுறுத்தும் ஆசிரியத் தலையங்கம்

(9ஆம் பக்கம் பார்க்க)

## அறிவியல் உலகம்

# தொலை நுணர்வுத் தொழில் நுட்பம் — பிரதேச அபிவிருத்தி ஆய்வுகளில் அதன் பிரயோகங்கள்

பலூனில் உயரச்சென்றுபுவிமேற்பரப்பை நிழற்படமாகப் பிடிப்பதில் ஆரம்பித்த கலை, இன்று வியக்கத்தக்க வகையில் வளர்ச்சிபெற்று அண்ட வெளியின் பொட்டுக்களாகத் தெரியும் கிரகங்கள் வரை விரிவு பெற்று நிற்கின்றது. விண் வெளிக்கு மனிதனை இட்டுச் செல்வதற்கு வழிசமைத்த அறிவியல் கண்டு பிடிப்புகள் மனித நாகரிகத்தை மேம்பட வைத்ததில் வியப்பில்லை. விண்ணை நோக்கி உயரக்கிளம்பிய அறிவியல் மனிதனின் சிந்தனைச் சிதறலின் ஒரு பகுதியே தொலைநுணர்வுத் தொழில் நுட்பம் (Remote sensing Technology) ஆகும். புவிமேற்பரப்புடன் எவ்வித தொடுதல் உணர்வுமின்றி மிகவும் தூரத்தேஇருந்து விமானங்கள் அல்லது செய்மதிகளில் (Satellite) களில் பொருத்தப்பட்ட சாதனங்களின் மூலம் தகவல்களைப் பெறுகின்ற அறிவியற்கலையாகவே, இந்நுட்பம் வளர்ச்சி பெற்றது.

செய்மதிகளில் இருந்து பெறப்படும் தரவுகள் ஐக்கிய அமெரிக்காவில் 'நாசா' நிறுவனத்தினல் சேகரிக்கப்பட்டு வருவதுடன் அவைதொடர்பான நாடாக்கள், படச்சுருள்கள் மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. இதற்கென பல நூறுமில்லியன் டொலர்கள் வருடாந்தம் செலவிடப்படுகின்றன. இன்று இவைதொடர்பான ஆய்வுகள் கணணிமயப்படுத்தப் பட்டவையாக உள்ளன. மாணவர்களின் பாடத்திட்டங்களில் கூடஇவைபற்றிய கல்வி புகுத்தப்பட்டுள்ளது. மனிதனைத் தாங்கிய விண்வெளித்திட்டங்களான மேக்குறி, ஜெமினி, அப்போலோ விண்வெளிப் பயணத்தின் பின்பே தொலை நுணர்வு நுட்பத்தில் ஆச்சரியப் படத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன.

*எஸ். அன்ரனிநோபேட்*

ஒரு பிரதேசத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றியபூரணத்துவமான ஆய்வுகளின் அடிப்படையில்தான், அபிவிருத்தி பற்றிய திட்டங்களை அமைக்க முடியும். இதற்கு அப்பகுதிகளின் வளங்கள் பற்றிய பூரணத்துவமான மதிப்பீடு ஒரு முன் தேவையாக அமைகிறது. தொலைநுணர்வு நிழற்படங்கள் (Imagery) இதற்கான சிறந்த மூலாதாரமாக அமைகின்றன.

### காட்டுவளங்கள்

காட்டுத்தீயினல் அழிந்த பகுதிகள், காடுகளைப் புதிதாக வளர்க்கும் பகுதிகள், காட்டுத்தீயின் நகர்வுப்போக்கு, அதன் திசை என்பவற்றைஇப் படங்களின் துணையுடன் மதிப்பிடலாம். தாவரப் போர்வைகளில் பருவகாலங்களுக்கேற்ப எத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதையும் அறியமுடியும். மனிதன் இலகுவில் புகமுடியாத அமேசன், கொங்கோ ஆகிய அடர்த்தியான மழைக்காட்டுப் பகுதிகளைக் கூட, இப்படங்களின் துணையுடன் ஆராயமுடிகிறது. தமிழ் நாட்டில் பெரியார் நதிவடிநிலத்தில் காடுகள் மற்றும் தாவரப் போர்வைகளில் ஏற்பட்ட மாற்றங்களை இருவேறு பட்ட காலப்பகுதி (1973 இலும் 1982இலும்) களில் இந்தியதேசிய தொலைநுணர்வு நிறுவனத்தினல் எடுக்கப்பட்ட படங்களில் இருந்து ஒப்பீடு செய்து ஆராயப்பட்டது. அபிவிருத்தியடைந்து வரும்நாடுகளில் காட்டுவளம் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும், அளவீடுகள், ஆய்வுகளை மேற்கொள்ளவும் இந் நிழற்பட மூலாதாரங்கள் ஒருபுரட்சிகரமான மாற்றத்தைச் செய்து வருகின்றன.

### விவசாய வளங்கள்

விவசாயத்துக்குத் தேவையான பயிர்ச்செய்கைப் பரப்பு, பயிர்களின் வளர்ச்சி, மண் அளவீடுகள், நிலவுடமையின் அளவு, உற்பத்தி பற்றிய எதிர்வு கூறல் ஆகிய தகவல்கள் பெறப்படுகின்றன. பரந்த விவசாய நிலப் பகுதிகளில் எடுத்த படங்களில் இருந்து பயிர்கள் பற்றிய அவதானிப்புகளை (Monitoring) யும், நோய்களின் தாக்கங்களையும் அறிந்து கொள்ள முடியும். ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விவசாய உற்பத்தியினையும், செலவீடுகளையும் திட்டமிடுவதற்கு செய்மதி நுணர்விகள் (Sensors) மூலம் பெறப்படும் தரவுகள் மிகப்பயனுள்ளவை. வெள்ளப்பெருக்கு வரட்சி, உறைபனி, காற்று, நோய்கள், தீஅழிவு, பூச்சிகள் மற்றும் மனித நடவடிக்கைகளினல் ஏற்படும் மாசுபடல் இராணுவ நடவடிக்கைகளின் பாதிப்புக்கள் இவை மூலம் தீர்மானிக்கப்படுகின்றன.

பிரெஞ்சு நாட்டின் ''ஸ்பொட் (Spot) திட்டமானது மிக நவீன நுணர்விகளைக் கொண்டிருப்பதினல், அவற்றைப் பயன்படுத்தி எடுக்கப்படும் நிழற்படங்கள் விவசாயப் பிரயோகங்களில் சிறந்த பயனைக் கொண்டவையாக உள்ளன.

### நிலப் பயன்பாடு

சனத்தொகை வளர்ச்சியினல் நிலத்தின் மீதான தாக்கங்கள் அண்மையில் அதிகரித்து வருவதினல், நிலத்தின் உற்பத்தித் திறனையும் அதன் பொருத்தமான (Suitability) தன்மை பற்றியும் மதிப்பீடு செய்வது அவசியம். நிலப் பயன்பாட்டின் வெவ்வேறு வகையான தன்மைகள், பண்புகள், இப்படங்களின் மூலம் தெளிவாகின்றன. தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் மண்ணின் வகைகள் பற்றிய வரைபடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கணணியின் உதவியுடன் உவர்த்தன்மை (Salinity) மட்டங்களை வேறுபடுத்தி, அவற்றினை வரைபடமாக்கும் முயற்சிகள், 1980 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு விட்டன. வரண்ட பகுதிகளில் உள்ள மேற்பரப்பு மண்ணின் ஈரப்பதன், வடிகால்கள், கழிவு நீரோட்ட இயலளவு, வெள்ளப் பெருக்குகள் ஆகியன இப்படங்களின் துணையுடன் ஆராயப்படுகின்றன.

### கல்லியல் ஆய்வு

புவியின் ஒவ்வொரு சூழலிலும் கல்லியல் (Geology) பிரச்சினைகளை அறியும் வண்ணம், பரந்த பிரதேசத்தை உள்ளடக்கிய கல்லியல் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான், அரிசோனப் பகுதிகளின் வளங்கள், மத்திய ஆசியாவின் பிரதேச அமைப்பு கரையோர அரித்தல் செய்முறைகள், எரிமலை நடவடிக்கைகள், பனிக்கட்டி ஆற்று நிலவுருவங்கள், ஆகியன இப் படங்களின் மூலம் தெளிவாக அறியப்படுகின்றன. முன்னைய காலங்களில் பெற முடியாத நிலத்தின் உட்புறக்காட்சிகளை, தொலைநுணர்வுப் படங்கள் நவீன நுணர்விகளின் உதவியுடன், மிக இலகுவாக வெளிக் கொணர்கின்றன. நில நெய், கனிப் பொருள் வளங்களின் தேடல்களில் பாரிய மாற்றங்கள் இத்தகைய நிழற்படங்களின் பயன்பாட்டின் பின்பே ஏற்பட்டன.

### சூழல் மாசுபடல்

தொழிற்சாலைகள், நகரங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் எவ்வாறு ஓரிடத்தில் தேங்கி நிற்கின்றன என்பதும், நீரோட்டங்களினல் ஏற்படும் கரையோர மணற்றடைகள் (Siltation) கப்பல்களின் உடைவினல் ஏற்படும் எண்ணெய்க் கசிவுகள், சிந்தல்கள், வெள்ளப் பெருக்கு, சூருவளி, புவிநடுக்க அழிவுகளினல் ஏற்பட்ட சேதங்கள் மிக நுட்பமாகக் காட்டப்படுகின்றன. டச்சு அரசுடன் இணைந்து இலங்கையின் 'சூழல் அதிகார சபை' நடத்திய அண்மைய ஆய்வுகளில், பொல் கொட ஏரியில் மரம் அரியும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் தூசுகள் படிந்திருந்தமையும் வெள்ளவத்தைக் கால்வாய் மூலமாகக் கழிவுகள் கடலுக்குள் கலப்பதையும் லுணுவையில் கடலுக்குள் சங்கமமாகும் கைத்தொழில் கழிவுகளும் இப்படங்கள் மூலமாகத் தெளிவாகக் காட்டப்பட்டன.

### நகரத் திட்டமிடல்

நகரநிலப் பயன்பாட்டு வகைகள், நகரச் சூழலின் பருவகால வேறுபாடுகள், நீர் வளங்களின் அமைவிடங்கள், இயற்கைத் தாவரங்கள், போக்குவரத்து வலைப்பின்னல் ஒழுங்குகள், குடியிருப்புக்களின் செறிவுகள், அதன்பரம்பல் போக்குகள் ஆகிய நகரத் திட்டமிடலுக்கு மிக அத்தியாவசியமான தகவல்களைத் தொலை நுணர்வு ஒழுங்கு மூலம், காலத்துக்குக் காலம் பெறமுடிகிறது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இத்தகைய நுட்பங்கள் புதிய தகவல் ஒழுங்கின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், புவியியலாளர்களினதும் திட்டமிடலாளர்களினதும் நீண்ட நாளைய தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன எனலாம்.

### படவரை கலையியல்

ஒரு பிரதேசத்தைப் பற்றிய தகவல் சேகரிப்பது, மரபு ரீதியாக நேரத்தையும் பணத்தையும் செலவழிக்கும் விடயமாக இருந்து வந்தது. ஆனல் தொலைநுணர்வுத் தொழில் நுட்பமானது, பிரதேச ரீதியாக, குறிப்பிட்ட ஒவ்வொரு விடயத்தை (Thematic map) விளக்கும் படங்களை விரைவாகவும் மலிவாகவும் தயாரிப்பதற்கான பயனுள்ள கருவி என்பதை, இதன் பிரயோகங்கள் நிரூபித்து வருகின்றன. மரபு ரீதியாக அமைக்கப்பட்ட படங்கள்கூட இவற்றின் உதவியுடன் புதிய தகவல்களைக் கொண்டதாகப் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி புவி முழுவதையும் தன்னியக்க ரீதியாக (automated) வரைபடமாக்கும் ஒழுங்கினைக் கூட, இந் நுட்பம் கொண்டுள்ளது. இவை நில அளவீட்டு முறைகளில் (Surveying method) மேலும் முன்னேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன.

### முடிவுரை

வளர்முக நாடுகளில் இயற்கை வளங்களை மதிப்பீடு செய்வது, அபிவிருத்தித்திட்ட நோக்கில் மிக அவசியமானது. ஆனல் இதற்குத்துணை புரியக் கூடிய தொலைநுணர்வுத் தொழில் நுட்பமானது மேற்கு நாடுகளின் ஆதிக்கத்தில் இருப்பதினல், அவற்றினல் ஏற்படும் நன்மைகள் குறைவாகவே இந்நாடுகளைச் சென்று அடைகின்றன. தேவை பற்றிய கோரிக்கைகளை மேற்கு நாடுகளின் விண்வெளிச் சக்திகள் சலுகை அடிப்படையில் அளிக்க முன்வருவதினல், வளர்முக நாடுகள் அவற்றினைப் பெறுவதில் தயக்கம் காட்டுகின்றன. பொருளாதாரச் சுமைகளினல் வளர்ச்சி குன்றியிருக்கும் வளர்முக நாடுகள் இத் தொழில் நுட்பத் திறமையை அறிந்திருந்தும்கூட, நிதிப் பிரச்சினையினல் அவற்றுக்கான விலையை அளிக்க முடியாத சூழ்நிலையில் உள்ளன. ஆனல் இந்தியா உட்பட பிறேசில் பங்களாதேஷ், சீன, தாய்லாந்து, பேரு, வெனிசூலா முதலிய நாடுகள் இத்தொழில் நுட்ப வளர்ச்சிப் போக்கில் அண்மைக்காலங்களில், தம்மைத் தீவிரமாக இணைத்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. □

## சிக்கல்கள் கொண்ட போலியோச் சிகிச்சை

சிறுவர்களின் மத்தியில் ஒளிந்திருக்கும் போலியோ தோன்ற இருக்கின்றபோது, அதனைக் கண்டுபிடிக்க முடியாத ஒன்ருக உள்ளது. போலியோ ஒருவரைத் தாக்குமிடத்து அவருக்குச் சிகிச்சை அளிப்பதும், அதனின்றும் அந் நோயாளி மீள்வதும் மிகவும் கடினம்.

தசைகளிலும் மூட்டுக்களிலும் நோ இருத்தல், களைப்புறும் தன்மை, மூச்சு விடுவதில் கஷ்டம் ஆகியவை, சாதாரணமாக எல்லாவகைப் போலியோவிற்கும் பொதுவான அறிகுறிகள் ஆகும். நோயின் விளைவு மிகப்பாரதூரமாக நோயாளியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக தசையிலோ அல்லது தசைத்தொகுதியிலோ, சுகமடைந்த ஒரு போலியோ நோயாளிக்குத் திரும்பவும் போலியோத் தாக்கம் ஏற்படுகின்றது. இவ்வாறு அடிக்கடி பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள், பெரும் மூச்சுத் திணறலை எதிர் நோக்கவேண்டிஉள்ளது. இந்நேரங்களில் பானங்களைப் பருகுவதற்கும் பேசுவதற்கும் மிகவும் கஷ்டமாய் இருக்கும்.

இதுவரை போலியோ நோய்ப் பாதிப்புக்கு உள்ளானவர்களில் கூடிய அளவானேர், 35வயது தொடக்கம் 55வயதுவரை உள்ளவர்களாகவே உள்ளனர். ஆனல் ஒரு வகைப் போலியோ (ஆங்கிலத்தில் Post Pollio Syndrome என வழங்கப்படுகிறது) கூடுதலாக பத்து அல்லதுஅதற்குமேற்பட்ட வயதுஉடையவர்களுக்கே உருவாகின்றது. இவர்களுக்கு வைத்தியசாலைச் சிகிச்சையும் செயற்கைச் சுவாசமும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன.

*ச. ஜெயக்குமார்*

போலியோ நோயின் அறிகுறிகளைக் கொண்டு நோயாளர்களை வகைப்படுத்த முடியாது. ஏனெனில், ஒவ்வொருவகையான போலியோ நோயின் அறிகுறிகளும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவையாக உள்ளன.

முன்பு போலியோநோய்க்கு ஆளானவர்கள் தங்களுடைய வாழ்க்கை முறையை, தற்போதைய நிலைக்கு ஏற்றமாதிரி மாற்றிக் கொள்ளல்வேண்டும். உதாரணமாக, இருக்கும் போதும், நடக்கும் போதும் நேராக நடக்க வேண்டும். இவ்வாருக, வெற்றியளிக்கக் கூடிய செயற்பாடுகள் கைக் கொள்ளப்படின், நோயிலிருந்து தன்னை நோயாளி விடுவித்துக் கொள்ளலாம். எனினும், இச்சிகிச்சை முறை நோயாளியைப் பொறுத்த வரை ஒரு சிக்கல் ஆகவே காணப்படுகிறது.

போலியோ தடுப்பு மருந்து எடுப்பதன் மூலம் இந்நோய்

(11ஆம் பக்கம் பார்க்க)

## கலைச்சாரல்

# கலை மேதைமையூடு வெளிப்படும் சமூக, அரசியல் பிரக்ஞை

**1955** இல் பதேர் பாஞ்சாலியிலிருந்து 1989 இன் கண சத்ரு வரை, 26 முழு நீளக் கதைத் திரைப்படங்களை (Feature films) சத்யஜித் ரே உருவாக்கியுள்ளார். இவற்றில் வெளிப்படுத்தப்பட்ட கலை மேதைமைக்காக பல்வேறு நாடுகளின் திரைப்பட விழாக்களில், பல விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு, உலகின் மிகச் சிறந்த திரைப்பட மேதைகளில் ஒருவர் என்ற அங்கீகாரமும் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

வங்காளம் உலகுக்கு அளித்த இந்த உயர்கலைஞனின் *ஜல்சாஹர்* (சங்கீத அறை); *பிரதித்வந்தி* (சித்தார்த்தவும் நகரமும்); *ஆரண்யேர் தின் ராத்ரி* (காட்டில், இரவுகளும் பகல்களும்); *ஹீரேக் ராஜர் தேஷே* (வைரங்களின் இராச்சியம்); *பரஷ் பதேர்* (மாயக் கல்லு) ஆகிய ஐந்து திரைப் படங்கள் கொண்ட திரைப்பட விழாவொன்று, சென்றமாதத்தின் பிற்பகுதியில் கொழும்பில் நடைபெற்றது. தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனமும், இந்தியத் தூதரகமும் இணைந்து இவ்விழாவினை ஒழுங்கு செய்திருந்தன.

### ஜல்சாஹர் (1958)

நொடிந்துபோன — ஆனால் பழங்காலம், முன்னோர் பற்றிய பெருமித நினைவுகளுடனும்; சங்கீத ஈடுபாடு, கலை



சத்யஜித் ரே

ஞர்களைப் போஷித்தல் என்பவற்றுடனும் — சிதிலமடைந்து கொண்டுவரும் மாளிகையில் வாழும் பிஸ்வம்பர் ரோய் என்ற ஜமீந்தாரைச் சித்திரிக்கும் படம். முதுசச் சொத்துக்கள் பெரும்பாலும் கரைந்த நிலை; சில நகைகள் மட்டும் எஞ்சியுள்ளன. நிலப்பிரபுத்துவ நிலையின் வீழ்ச்சி எமக்கு உணர்த்தப்படுகிறது. வட்டிக்குப் பணம் கொடுப்பவரின் மகன் — மஹிம் கங்குலி — ஒப்பந்தகாரனாகி (Contractor) புதுப்பணக்காரனாக மேலெழுச்சி பெறுகிறான்; புது வீடு கட்டுகிறான். புதுமனை புகுவிழாவிற்கு ஜமீந்தாரை அவன் அழைக்கிறான். அவர் அவனைக் கௌரவிக்க விரும்பவில்லை. அன்றைய தினம், தன்னைச் சந்தித்துக் கௌரவம் செய்யும் வைபவத்தை (homage day) சங்கீத நிகழ்ச்சியுடன் சிறப்பாகக் கொண்டாடி, தன் பெருமையை நிலைநாட்டுகிறார். சில நகைகளை விற்றே இவ்வாறு செய்யமுடிகிறது.

இந் நிகழ்ச்சியின் நடுவில் அவரது மனைவியும் மகனும், புயலினால் ஆற்றில் படகு கவிழ்ந்ததில் இறந்து போன செய்தி வருகிறது; அவர் எல்லாமே இழந்தவராக உடைந்து போகிறார்.

சில வருடங்களின் பின், தனது வீட்டில் அமைக்கப்பட்ட சங்கீத அறையைத் திறந்து வைக்க, மஹிம் கங்குலி அவரை அழைக்கிறான். அவரோ எஞ்சிய நகைகளையும் விற்று, பிரபலமான நடனக்காரியின் நடன நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்கிறார். தூசு படிந்துகிடந்த சங்கீத அறை துப்புரவு செய்யப்படுகிறது; கண்ணாடி விளக்குகள் துடைத்து மினுக்கப்படுகின்றன. அந்நிகழ்ச்சிக்கு கங்குலியும் அழைக்கப்படுகிறான். நிகழ்ச்சியின் இறுதியில், நடனக்காரிக்கு அன்பளிப்புக் கொடுக்க நீளும் கங்குலியின் கரத்தை, தனது கைத்தடியால் கொழுவி இழுத்துத் தடுக்கிறார் பிஸ்வம்பர் ரோய். அன்பளிப்பை முதலில் வழங்கும் உரிமை தனக்கே உரியது எனக் கம்பீரமாகக் கூறியபடி, தன்னிடம் எஞ்சியிருந்த கடைசித் தங்க நாணயங்களை வழங்கித் தனது பெருமையை நிலைநாட்டுகிறார். பிறகு தனது பிரியத்துக்குரிய சமையலாளிடம் இந் நிகழ்ச்சிபற்றி விபரிக்கையில், 'எல்லாம் எனது நரம்புகளில் ஓடும் பெருமைக்குரிய இரத்தத்தினால்' என்று கர்வப்படுகிறார். ஆனால் இனி மேல் அவரிடம் ஒரு செல்வமும் இல்லை; அந்தத் தங்க நாணயங்கள்தான் அவரது கடைசிச் செல்வம்.

காலையில் அவர் தனது மாளிகையில் நின்று பார்க்கிறார். தொலைவில், நோய்வாய்ப்பட்ட அவரது யானை தெரிகிறது. அது அவரதும் குறியீடுதான்! தனது குதிரை துஃபானில் ('புயல்' என்று அர்த்தம்) ஏறி, நீண்டகாலத்தின் பின், வெகு வேகமாய் வெறித்தனத்துடன் நீண்டதூரம் ஓட்டிச் செல்கிறார். கடற்கரையோரமாய்க் குதிரையிலிருந்து வீசப்பட்டதில் மரணமடைகிறார். புயலின் போதுதான் மனைவியும் மகனும் இறக்கிறார்கள்: அவரது மரணமும் 'புயல்' என்ற குதிரையினூடாக வருவதில், ஒரு ஒப்புமை காணப்படுகிறது.

நிலப்பிரபுத்துவம் வீழ்ச்சியடைய புதுப்பணக்கார வர்க்கம் மேலெழுச்சியடைவதான சமூகநிலைமாற்றம் பற்றிய புரிதல் பார்வையாளரிடம் ஏற்படுகின்றபோதிலும், தனது நோக்கம் அதற்கும் அப்பாலானதென்று, சத்யஜித் ரே பேட்டியொன்றில் கூறியுள்ளார்:

''நிலப்பிரபுக்கள் சங்கீதத்தைப் போஷிப்பவர்கள். தமது கலைகள் பற்றிய ஆழ்ந்த புரிதல்களுக்காக இந்த உயர் குடியினருக்கு, எமது பாரம்பரிய சங்கீதக் கலைஞர்கள் கடமைப்பட்டவர்கள். புதுப்பணக்காரர்கள், இக்கலைஞர்களைச் சரியாகப் புரிந்து பாராட்டும் திறனில்லாது அழைக்கிறார்கள். நிலப்பிரபுத்துவத்தின் மறைவோடு இந்தக் கலாசாரமும் மறைகிறது. மறைந்து செல்லும் இந்தக் கலையின் கடைசி அடையாளத்தையாவது பேணிப் பாதுகாக்கவே, 1958 இல் 'ஜல்சாஹர்' திரைப்படத்தை உருவாக்கினேன்.''

பிஸ்வம்பர் ரோயின் பாத்திரம் சிறப்பாக உருவாக்கப்பட்டிருக்கிறது. சாபி பிஸ்வாஸ் அருமையாக அதனை நடித்துக் காட்டுகிறார். சங்கீதம் முக்கிய இடம் பெறும் இப்படத்திற்கு இசையமைத்திருப்பவர், புகழ்பெற்றசிதார் கலைஞரான விலாயத் கான். இப்படத்தின் இசையும் எமக்கு அரிய அனுபவம்தான்.

''சத்யஜித் ரே வேறொரு திரைப்படத்தை உருவாக்கியிராவிடினும் இவ்வற்புதப் படைப்பினால், மாபெரும் திரைப்பட மேதைகளில் ஒருவர் என்ற நிலைத்த கௌரவத்தைப் பெறுவார்'' என, நியூஸ் வீக் சஞ்சிகை எழுதிய (1963) கூற்றும், அர்த்தம் நிறைந்ததுதான்.

### பிரதித்வந்தி (1970)

தந்தையின் திடீர் மரணத்தினால் சித்தார்த்த வின் மருத்துவக் கல்லூரிப் படிப்புத் தடைப்படுகிறது. அவன் வேலை தேடுகிறான்; முயற்சியெல்லாம் வியர்த்தமாகிறது. தாய், எப்படியாவது வாழ்வில் முன்னேறிடும் ஆசைகள் கொண்ட — கவர்ச்சியான — வேலைபார்க்கும் சகோதரி, புரட்சிகர அரசியல் ஈடுபாடுள்ள தம்பி ஆகியோரைக் கொண்ட குடும்பம்.

சந்தேகங்களுடனும், உள் முரண்பாடுகளுடனும், பிரச்சினைகளுடனும் வாழும் சித்தார்த்த, வாழ்க்கையில் உயர்வடைய எதையும் விட்டுக்கொடுக்கச் சகோதரி தயாராயிருப்பதை உணர்கிறான்; அவள் எவ்வளவு மாறிப்போனாள் என்பதைக் கசப்புடன் விழுங்கிக் கொள்கிறான். இடையில், தன்னை விரும்பும் ஒரு இளம் பெண்ணைச் சந்திக்கிறான்; அவள் மீது இவனுக்கும் ஈடுபாடு இருக்கிறது. வேலைக்காக அலைவது சலிப்பைத் தருகிறது; அவள் ஆறுதல் தருகிறாள்.

ஒரு நேர் முகப்பரீட்சையின் போது அவனிடம் கேட்கிறார்கள்: 'சென்ற சகாப்தத்தின் முக்கிய நிகழ்வு எது?'

'வியட்நாம் போர்' என்று அவன் பதிலளிக்கிறான்; 'ஏன்' என்று கேட்கிறார்கள்.

'மக்களின் அபாரத்துணிவை அது வெளிப்படுத்துகிறது' என்று பதில் சொல்கிறான். 'நீ ஒரு கொம்யூனிஸ்ற்றா?' என பரீட்சையாளரில் ஒருவர் கேட்கிறார்: 'இல்லை' என்கிறான். அவனுக்கு தீர்க்கமான அரசியல் கருத்துக்களேதும் இல்லை. ஆயினும் தான் உணர்ந்ததை வெளிப்படுத்துகிறான்.

வேறொரு நேர்முகப்பரீட்சையில்; மணிக்கணக்காக நின்றபடியே ஏராளமானோர் வெளியில் காத்திருக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் உட்காருவதற்குப் போதிய இருக்கை வசதிகளேதும் இல்லை; களைப்பினால் சிலர் மயங்கி வீழ்கின்றனர். சித்தார்த்த உள்ளே சென்று, நேர்முகப்பரீட்சை நடத்துபவர்களிடம் இதுபற்றித் தெரிவிக்கிறான், அவர்கள் அதைப் பொருட்படுத்தாததோடு கேலி செய்கின்றனர். குறைந்தபட்ச மதிப்பையும் தரத்தயாராயில்லாத அவர்களின் நிலைக்கு எதிராக ஆத்திரமடைந்த சித்தார்த்த, மேசையைப்புரட்டிவிடுகிறான்' தனக்கு மட்டுமல்லாது ஏனையவர்களுக்குமான கிளர்ச்சிச் செயலாக அது அமைகிறது.

இறுதியில், தான் நீங்கிச் செல்ல விரும்பாத கல்கத்தாவையும் காதலியையும் விட்டு' மருந்துப் பொருள் விற்பனை செய்யும் சிறு வேலையை ஏற்று, வெளியூர் செல்கிறான். சிறிய அறையொன்றை எடுத்து பெட்டி படுக்கைகளை வைத்து விட்டு இருக்கையில், சிறுவயதில் தான் நேசித்து வியந்த பெயர் தெரியாத பறவையின் இனிய குரலைக் கேட்கிறான்; யன்னலூடாக அப் பறவையைக் கண்ட உற்சாகத்துடன் காதலிக்குக் கடிதம் எழுதுவதுடன், படம் முடிகிறது.

'ரே' இதனைத் தனது முதலாவது அரசியற் படமெனக் குறிப்பிடுகிறார். வேலையற்ற இளைஞர்களின் அவலம், அவர்களின் நசுங்குதல்கள்; மாற்றத்திற்கான தேடலில் தோன்றும் புரட்சிகர அரசியல் ஈடுபாடு; வாழ்க்கையின் நிர்ப்பந்தங்களில் மாற்றமுறும் விழுமியங்கள் என்றவாறாக சமகால சமூக, அரசியல் யதார்த்தத்தை 'ரே' அழகாக வெளிக்கொண்டு வருகிறார்.

இப்படத்திற்கான இசையமைப்பினையும் 'ரே' தான் செய்திருக்கிறார்.

### ஆரண்யேர் தின் ராத்ரி (1970)

இந்தப் படம் 'ரே'யின் வழமையான, மனிதாய அம்சங்களை மென்மையாகவும் நேரடியாகவும் சொல்லும் முறையிலிருந்து மாறுபட்டதும், சிறிது சிக்கல் நிறைந்ததுமாகும். பாத்திரங்களின் குணநல ஆய்வே இங்கு முக்கியம் பெறுகிறது. இப்படத்தைப் பற்றிச் சொல்லுகையில் 'சிறியதற்கூடாக அகண்டத்தைச் சித்திரிக்க முனையும் இந்திய மரபை' ரே குறிப்பிட்டதை, இங்கு நினைவு கூர்வதும் பொருத்தமானது.

கல்கத்தாவின் மாமூல் வாழ்க்கையில் சலிப்படைந்த நான்கு நண்பர்கள் — அஷிம் (நிர்வாக அதிகாரி); சஞ்ஜோய் (சணல் ஆலையொன்றின் தொழில் அதிகாரி); ஹரி (விளையாட்டு வீரன்); சேகர் (வேலையற்றவன்; சூதாட்டத்தில் விருப்பமுள்ளவன்)—பீகாரிலுள்ள 'பழமவ்' என்ற காட்டுப்பகுதிக்கு, விடுமுறையைக் கழிக்க வருகின்றனர். காவலாளிக்கு

**அ. யேசுராசா**

லஞ்சம் கொடுத்து, காட்டுப் பங்களாவில் தங்குகின்றனர்,

அங்கு தங்கிவாழும் திரிபாதி குடும்பத்தினருடன் — சதாசிவ் (தகப்பன்), அபர்ணா (மகள்), ஜெயா (மருமகள்) ஆகியோரோடு அவர்களுக்குப் பழக்கமேற்படுகிறது.

அபர்ணாவின் ஒதுக்கமான ஆளுமையினாலும், ஆய்வறிவுத் திறனாலும் 'அஷிம்' ஆகர்ஷிக்கப்படுகிறான். பல நிகழ்வுகளால் தாம் சிக்கலான உறவு நிலைகளுள் சிக்குப்பட்டிருப்பதை நண்பர்கள் உணர்கின்றனர்.

இடையில் காட்டிலாகா அதிகாரி வந்து பங்களாவை விட்டுச் செல்லும்படி— முறையற்றவிதத்தில் அதைப்பெற்றபடியால்— கட்டாயப்படுத்துகிறார். அபர்ணாவின் தந்தை அவருக்குத் தெரிந்தவராகையால், அவர் மூலமாகப் பிரச்சினை தீர்க்கப்படுகிறது.

ஹரி பழங்குடிப் பெண்ணை வசியப்படுத்திக்கூட்டிச்சென்று காட்டில் உடலுறவு கொள்கிறான்; ஜெயா, சஞ்ஜோயைத் தனிமையில் மயக்கமுடியாமற் போனதில், வெட்கமும் அவமானமும் அடைகிறாள்; அஷிமும் அபர்ணாவும் பரஸ்பரம் புரிந்து கொண்டதில், நெருங்

(7ஆம் பக்கம் பார்க்க)

# ஈ

— வில்லியம் பிளேக்
இங்கிலாந்து

சின்னஞ் சிறு ஈ,
கோடையின் விளையாட்டு
எனது நினைவற்ற கரம்
அதனைத் தட்டித் துரத்தியது
நானும் உன்னைப்போன்று
ஈயில்லையா?
அல்லாவிடில் நீ
என்னைப்போன்று ஒரு மனிதனில்லையா?
ஏனெனில் நான் நடனமாடுகின்றேன்,
பருகுகின்றேன், பாடுகின்றேன்
ஏதாவது ஒரு குருட்டுக்கரம்
என்னைத் தட்டித் துரத்தும்வரை
நினைவு உயிர்
சக்தி, மூச் சென்றால்,
நினைவு இல்லாமை மரணம் எனின்,
அப்போதுதான் நான்
ஒரு மகிழ்வான ஈ,
நான் உயிருடன் இருப்பினும்
அல்லது மரணித்தாலும்

— தமிழில்: மூ.சி சிவிதம்பி □

# அவமானப்படுத்தப்பட்டவள்

உங்களுடைய வரையறைகளின்
சாளரத்துக்குப் பின்னால்
நீங்கள் என்னைத் தள்ள முடியாது.
இதுவரை காலமும்
நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்துவரப்பட்ட
ஒரு சிறிய கல்லைப்போன்று
நான் —
என்னைக் கண்டெடுத்துள்ளேன்
என்னுடைய நாட்களை நீங்கள்
பறித்துக் கொள்ளமுடியாது
கண்களைப்பொத்திக் கொள்ளும்
உங்கள் விரல்களினிடையே
தன்னைக் கீழிறக்கிக் கொள்ளும்
ஒரு குட்டிநட்சத்திரம் போன்று
எனது இருத்தல்
உறுதிபெற்றது.
நிராகரிக்கப்பட முடியாதவள் நான்.
இனியும் என்ன?
தூக்கியெறியப்படமுடியாத கேள்வியாய்
நான் பிரசன்னமாயுள்ளேன்
என்னை
அவமானங்களாலும் அநாகரிக வார்த்தையாலும்
போர்த்துங்கள்
ஆனால்
உங்கள் எல்லோரினதும்
நாகரீகம் வாய்ந்த கனவுகளின் மீது
ஒரு அழுக்குக் குவியலாய்
பளிச்சிடும் உங்கள் சப்பாத்துக்களை
அசுத்தம் செய்கின்றேன்,
என்னுடைய நியாயங்கள் நிராகரிக்கப்படும்வரை
உங்களின் எல்லாப் பாதைகளும்
அழுக்குப் படிந்தவையே;

— சி. சிவரமணி □

# வெறுமை

அந்தரித்து
தொங்கும் வானப் பெருஞ்சூனியம்
ஆழப்புதைந்தும் வியாபித்தும்
இருள் புரியும் சன்னதங்கள்.
நிலவு காய்தலும்
சணல் மஞ்சளாய்ப் பூத்தலும் அழகுதான்.
எனினும்,......
எங்கும் வெறுமை தொக்கும்
தடத்தில் விரையும் ரயிலென
சோகம் சுமந்து வாழ்வு நகரும்.
புரிந்து கொள்ளலும்
நேசமும் இன்றி
என்னிருப்பு சிதைவுறும்
விடுபட வேண்டும்,
விடுபட்டே ஆக வேண்டும்

— அசோக் □

# மூன்று குறிப்புக்கள்

## ஒன்று

நாடகம் பற்றித்'' திசை'' யில் அபராஜிதா எழுதிய கட்டுரையையும், அக்கட்டுரையோடு ஒவ்வாத கருத்துக்கள் கொண்ட வேறு இருகட்டுரைகளையும், அதன்பின்னர் அபராஜிதா எழுதிய கட்டுரையையும் வாசித்த போது அபராஜிதா மீது புதிய நாடக வளர்ச்சிநிலைக்கு எதிரானவர் அல்லது புறம்பானவர் என்பது போன்ற ஒரு அழுத்தம் தோன்றுவது போல் தெரிந்ததனால் இக்குறிப்பை எழுதுகின்றேன்.

மௌனகுருவின்' சக்தி பிறக்குது.' நாடகம் முதலாவது தடவை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அரங்கேறிய போது, அந்நாடகத்தைப் பார்த்து ரசித்தவர்களுள்(?) நானும் ஒருவன். நாடகம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அந்த அரங்கினுள் இருந்த பார்வையாளர்கள் பலர் (இவர்களுள் பலர் பல்கலைக்கழக மாணவர்கள்)நடந்து கொண்ட முறைமைகளே, அவர்கள் நாடகத்தோடுஒன்றவில்லை என்பதனை வெளிப்படுத்தியது. நாடகமுடிவில், நான் நாடகாசிரியர் கையாண்ட பல குறியீட்டு நிகழ்வுகள் பற்றி பார்வையாளர்கள் பலரோடு கதைத்தபோது, அவர்கள் அதைப் புரிந்துகொண்டதாகவோ, கவனித்ததாகவோ தெரியவில்லை. இந்த நிலையிற்தான் பல்கலைக்கழக நாடக நிகழ்வுகள் பலவும் நடக்கின்றன (இந்நிகழ்வுகள் வெளியே இடம் பெறுமாயின் அதன் பெறுபேறு எப்படி இருக்கும் என்று என்னால் சொல்லமுடியவில்லை) ஆகவே இந்நாடக நிகழ்வுகள் ஆரோக்கியமான ஒரு வளர்ச்சிநிலை என்பது முற்றிலும் சரியானதல்ல என்ற அபராஜிதாவின் கருத்து நியாமானதே' இது சம்பந்தமானோர் ஒருபொது நோக்கைக் காண்பது நமது நாடக வளர்ச்சிக்கு நலம் தருவதாக அமையும்.

## இரண்டு

17 - 18.03.90 ஆம் திகதிகளில் நடைபெற்ற ஆசிரியர் திரு. மாற்கு அவர்களின் ''இன்னொரு முகம்'' ஓவிய, சிற்பக், கண்காட்சி மண்டபத்தினுள் நான் கண்டு கொண்ட ஒரு அனுபவம்.

18ஆம் திகதி காலை 8. 30 முதல் 11-30வரை நான் அந்த மண்டபத்தினுள் இருந்தேன். அந்தநேரத்தில் மண்டபத்தின் பார்வையாளர் பலரும், இளம் பராயத்தினரே. அவர்களுள் பலர் தேடல் மிக்கவர்களாக இருந்ததையும் காணக்கூடியதாகவிருந்தது. உதாரணத்துக்குஎனக்குச் சமீபமாகநின்ற ஒரு பதினைந்து வயதுச் சிறுமியின் ரசிப்புத்தன்மை, மிகத் துடிப்புடையதாகவிருந்தது. பல பெரியவர்களின்பொறுமையைச் சோதித்த அக்கண்காட்சி, அச்சிறுமி போன்ற இளம் பராயத்தினருக்கு ஆர்வம் தருவதாக அமைந்தது. ஈற்றில் குறிப்பேட்டில் அச்சிறுமி தன்னைக் கவர்ந்த ஓவியங்கள் பற்றிக் குறிப்பிடும் போது, பலபெரியவர்களின் மண்டையைக் குழப்பிய'ராதையும் கிருஷ்ணனும்' ஓவியத்தையும் குறிப்பிட்டிருந்தாள். அதைப்பார்த்தபோது நமது மண்ணில் நவீன ஓவியத்தின் எதிர்காலம் நம்பிக்கை தருவதாக இருந்தது. ஆசிரியர் திரு. மாற்கு அவர்களே! ஆர்வமும் தேடலும், பாய்ச்சலும், மிக்க இளைய பரம்பரை ஒன்று உங்களை அடையாளங் கண்டுள்ளது.

## மூன்று

அண்மையில் வடக்குக் கிழக்கு மாகாணசபையால் பட்டதாரிகளுக்கு வேலைவழங்கல் என்ற வகையில் ஆசிரியப் பதவிகள் வழங்கப்பட்டனவாம். இப் பதவிகளுக்கான சம்பள அளவீடுகளும் ஒரே தன்மையில் இருந்தனவாம். இது குறித்து ஒரு யாழ். வளாக வணிகமானிப் பட்டதாரி ''சங்கீதம், டான்ஸ் செய்தவைக்கும் எங்களுக்கும் ஒரே லெவல் எண்டால் பிறகேன் நாங்கள் B. Com செய்வான்''. என விசனப் பட்டுக் கொண்டார். இது மட்டுமல்ல, நுண்கலைப்பீட மாணவர்களை வளாக எல்லைக்குள் நீங்களும் பட்டதாரிகளா? எனக் கிண்டல் செய்வதும், புறங்காட்டுவதும் போன்ற சம்பவங்களும் உண்டு. சமூக உருவாக்கத்தில் கலைகளும் கலைத்துறை சார்ந்தோரும் முக்கியம் என உணரப்பட்டு வரும் காலத்தில், இப்படியும் சில......

பல்கலைக் கழக உயர்பீடத்திலேயே நுண்கலைகள் பற்றி அப்படி... இப்படி... என்றிருக்கும்போது, மாணவர்கள் எப்படி... (ஆயினும் இதற்கு விலக்கான மாணவர்களும் இல்லாமலில்லை). □

□□ சாகித்யா □□

# கலை....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிய நண்பர்களாகின்றனர்; சேகர் சந்தையில் சூதாடிக் களிக்கின்றான்.

திடீரென இரண்டு பெண்களும் திருமண நிகழ்ச்சியொன்றுக்காக கல்கத்தாவிற்குச் செல்ல நேர்கிறது.இதன் பின்னர், நண்பர்களுக்கு 'பழமவ்' வில் ஒன்றுமில்லை என்றாகிவிடுகிறது!

லஞ்சம், கவர்ச்சி, காமம், செல்வாக்கினால் விதிகளை மீறுதல், சூதாட்டம், துக்கத்தின் பாதிப்பு— ஒதுங்கிய தன்மை (அபர்ணாவின் சகோதரன் — ஜெயாவின் கணவன்—லண்டனில் தற்கொலை செய்தான்; தாய் இங்கு தன்னையே எரித்துக் கொண்டு மாண்டாள்), கபடின்மை, பழிவாங்குதல் என்பனவெல்லாம் காட்டிலும் மனிதர்களிடை நிகழ்கின்றன. மனிதர்களின் தனி இயல்புகள், வெவ்வேறு சூழலில் கலாரீதியான ஆய்வுடன் வெளிக்கொணரப்படுகின்றன. உரையாடல் அதிகமான இப்படம் புதுவகையான அமைப்பினையே கொண்டுள்ளது.

## ஹீரேக் ராஜர் தேஷே (1980)

கற்பனையும் யதார்த்தமும் இணைந்து சமகால நீதிபோதனைக் கட்டுக்கதை (Fable வடிவில், இது அமைந்துள்ளது.

வைரச் சுரங்கத்தால் செல்வம் கொழிக்கும் 'ஹீரேக்' நாட்டின் அரசன் சுரங்கத் தொழிலாளர்களை, விவசாயிகளைச் சுரண்டுகிறான். நாட்டிலுள்ள ஒரே பாடசாலையையும் மூடி விடுகிறான்; அறிவினைத் தரும் ஏட்டுச் சுவடிகளையெல்லாம் கொளுத்தச் சொல்கிறான். காரணம்,அறிவு பரவினால் பிரச்சினைகள் உருவாகும் என்பது அவனது கருத்து. தான்போஷிக்கும் ஒரு விஞ்ஞானி கண்டு பிடிக்கும் புதிய இயந்திரமொன்றின் துணை கொண்டு, தனக்கு மாறானவர்களின் மூளைகளில் தனக்குச் சார்பான கருத்துக்களைப் பதியச் செய்து, எதிர்ப்புக்களே இல்லாது போகுமாறு பார்த்துக்கொள்கிறான். பாடசாலை ஆசிரியனான உதயன் மலையில் மறைந்து வாழ்ந்தபடி, தனது மாணவர்களின் மூலம் கிளர்ச்சியை உருவாக்குகிறான். யாரையும் அசையாதிருக்கச் செய்யும் மந்திர இசைத் திறமையும், மாயக் காலணிகளும் (இவைமூலம் உடனே எங்கும் செல்லலாம்; வேண்டிய உடைகளையும் உணவுகளையும் பெறலாம்) கொண்ட கோபி,பஹா ஆகிய இருவரின் உதவியும் உதயனுக்குக் கிடைக்கிறது. இறுதியில் சர்வாதிகார அரசன் வீழ்த்தப்படுகிறான்.

குறியீட்டு ரீதியிலான அம்சங்கள், சமகால அரசியற் பொருத்தப்பாட்டினைக் கொண்டுள்ளன.

அதிகாரக் கொடுமை, ஆளுவோருக்குச் சார்பான கருத்துப் பிரச்சாரம், ஒடுக்கப்படுபவர்களின்ஐக்கியமும் போராட்டமும் என்பன தெளிவான அரசியற் செய்தியைத் தருகின்றன.

அருமையானஇசை நிறைந்த பாடல்கள், அழகு நிறைந்த வர்ணப் படப்பிடிப்பு, செம்மையான பாத்திரச் சித்திரிப்பு என்பன அரசியற் செய்தியைக் கலாரீதியானதாக்குவதில் இணைந்து கொள்கின்றன. இப் படத்திற்காக இனிமையான இசையை அமைத்திருக்கும் 'ரே' மேலும் மதிப்புப் பெறுகிறார்.

## பராஷ் பதேர் (1957)

இதுவும் யதார்த்தமும் கற்பனையும் இணைந்த ஒரு கதை. கல்கத்தாவின் ஒரு சாதாரண வங்கி எழுதுவினைஞர் (முதியவர்), ஒரு மழை நாளில் வேலை முடிந்து வருகையில் சிறு மாயக்கல்லினைத் தெருவில் கண்டெடுக்கிறார். அது இரும்

(11ஆம் பக்கம் பார்க்க)

திசையின் சிறுகதை

# இவன்

யாணைப்பாகன்



“இன்டைக்கெப்பிடியும் சைக்கிள் பழகிப் போடோணும்”

இப்படி நினைத்துக் கொண்டுதான் இவன் போனான். எண்ணெய்வைத்து உரசிய தலைமயிரை கையால் பின்னால் கோதியவாறு போனான், கையிலும் எண்ணெய் இருந்திருக்கவேண்டும். காலில் குனிந்து தடவினான்.

இவன் பழகுகின்ற சைக்கிள் வேலியிலே சாத்திக் கிடந்தது. இவன் அப்பா காலத்துச்சைக்கிள். இப்போது பழசாகிவிட்டது. 'பிறேக்கோ' பின்சில்லு மட்காட்டோ, இல்லாத சைக்கிள். சைக்கிள் என்று சொல்லுவதற்கு வேண்டிய ஆகக்குறைந்த சாமான்கள் மட்டும் தான்.

பனிஇன்னமும் முற்றாக அகலவில்லை. தூரத்தில் மென்னிலப் புகை மாதிரி... அநேகமாக இப்போது ஏழுமணியாக இருக்கலாம் அல்லது நேற்றைய நேரமாக இருக்கலாம்.

மீண்டும் ஒரு தடவை கையால் தலையைக் கோதியவாறு சைக்கிளை எடுத்தான். வழமையைப் போலத் தெத்தித் தெத்தி... நேற்றைக்குக் கொஞ்சம் முன்னேற்றம். இவனுக்கு இன்றையில் நம்பிக்கை இருக்கிறது.

''எப்பிடியும் பழகீடலாம்''

நேற்றைக்குப் பின்நேரம் தேத்தண்ணி குடித்து விட்டுப் பழகினான். பெடலில் தெத்தித்தெத்தி சரிவில்வரும்போது சற்றுக் காலைத் தூக்கி...கொஞ்சம் கொஞ்சம் பலன்ஸ் வந்த மாதிரி சிறிது உற்சாகம். என்றாலும் இன்னமும் காலைத் தூக்கிப்போட முடியவில்லை.

இவனை விடச் சிறிய, மிகவும் சிறிய பெட்டைகள் எல்லாம் சைக்கிள் ஓடுகிறபோது... இவனுக்கு ஏக்கமாக இருக்கும். அவ்வப்போது முயற்சி எடுத்துத்தான் வந்திருக்கிறான் என்றாலும், இயலாமல் ஆறப் போட்டு...

இவனுக்குச் சோகமும் ஆறப் போடுகிற இன்பமும்.

பழைய நினைவுகள் வந்தன. அப்போது இவன் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். தினமும் பாடசாலை முடிந்து வந்ததும் 2 மைல் தொலைவிலிருக்கிற ரியூசன்.

பாடசாலையால் வந்து அதே சேட் காற்சட்டையோடு முகத்தை மட்டும் கழுவிவிட்டு விரைவு விரைவாகச் சாப்பிட்டுப்போக... அதற்கு முதலே இவன் வகுப்புப் பொடியன்கள் எல்லாம் போய்விடுவார்கள். இவன் அந்த இரண்டு மணி நேரத்தால் கொதிக்கின்ற வெயிலில் ஒரு வெள்ளைத் தொப்பியோடும் சேட்டோடும் தனியாகத்தான் செல்வான். பொடியன்களோடு சேர்ந்து போக இவனுக்கு விருப்பமில்லை. அவர்களோடு போனால் ''வெள்ளெனச்'' சென்று கதைத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

இவன் வியர்க்க வியர்க்கச் செல்வான். முடிவில் ரியூசன் ஒழுங்கை வளைவில் இவன் வியர்வையைத் துடைத்தவாறு, விரைவாக காற்சட்டை 'ஸிப்பைக்' கழற்றி சிறுநீர் கழிப்பான். பொடியன்களோ மனுசன்களோ வந்தாலும் இவன் தொடர்ந்து சிறுநீர் கழிப்பான். இவன் வகுப்புப் பெட்டைகள் வந்தால் மட்டும் தான்···தார் கொதிக்கிற வெய்யிலில் யார்தான் வரப் போகிறார்கள்?

இந்தச் சிறுநீர்- இதை ஏதோ ஆஊஊ என்று சொல்லுவான். வரும்போது மூன்று இடத்தில் ஆ ஊஊ கழிப்பான். வீட்டை விட்டு வெளிக்கிட்டதும் முன்னால் இருக்கிற பூவரச மரத்தில் பிறகு ஒருமைல், தூரத்தில் இருக்கின்ற பாலத்தில் இறங்கி... முடிவில் இந்த ரியூசன் ஒழுங்கை வளைவில்.

அநேகமாக இவன் போகவும் ரியூசன் தொடங்கவும் சரியாக இருக்கும். ரீச்சர்கூட அடிக்கடி சொல்லுவாவே!

''என்னடா கிருபா கம்பி முள்ளு வந்து ரண்டிலை நிக்கத் தான் வாறனியோ?''

ரீச்சர் கணிதத்தையும் தமிழையுந்தான் அதிகநேரம் படிப்பிப்பார். அதிலும் கணிதம் கொஞ்சம்கூட. இவன் கணக்குகள் எல்லாம் செய்து முதல் காட்டுகிற மூன்று கொப்பிகளுக்குள் காட்டுவான். ஆனாலும் இவனுக்கு கணக்கு விருப்பமில்லை, ஆங்கிலமும் சுகாதாரமும் சமயமும் ஒழுங்காக 'ரைம்ரேபி'ளில் போட்டிருந்தாலும், அதிகநேரம் கணிதமும் தமிழுந்தான்.

ரியூசன் முடிய நாலு நாலரை செல்லும். வரும்போது பொடியன்களுடன் சேர்ந்து வருவான். வெயில் குறைந்து தார் வீதி குளிர ஆரம்பிக்கும். தோள்களிலே கைகளைப் போட்டுக் கொண்டு பையப் பைய...

வழியிலே சிலநேரம் சண்டை பிடிப்பார்கள். மாரிகாலமாக இருந்தால், பூமரங்கேட்டு வாங்குவார்கள்; அல்லது களவெடுப்பார்கள்.

இந்தப் பூமரங்கள்!

அநேகமாக எல்லாப்பொடியன்களும் பூந்தோட்டமொன்று வைத்திருப்பார்கள். மாரிகாலம் முடிகிறதோடு இந்தப் பூமரங்களும் முடிந்து போகும். இவனுடையது கோடையிலும் இருந்தது.

வீட்டை வந்ததும் பூமரங்களுக்குத்தண்ணீர் விடுவான். பிறகு பின்நேரம் இனியதேநீர்.

அண்ணா வீட்டை வர எழரை எட்டுஆகும். அவர் பஸ்ஸில்தான் பள்ளிக்கூடத்துக்குப் போவார். ரியூசனிற்கு நேரம் போனால் அப்படியே போவார். வரும்போதெல்லாம் களைத்து வியர்வைஉப்புக்கள் காய்ந்து படிந்துபோயிருக்கிற முகங்களுடனும், லோன்றிக்குக் கொடுத்தவெள்ளைச்சேட்டின் மணம் மணக்க மணக்க... அந்த நாட்களில் அவரால் அதிகநேரம் படிக்க முடியாது.

மாரிகாலத்தில் தாத்தா 'வேளைக்கே' பிட்டு அவித்து விடுவார். பிட்டோடு மத்தியானத்துக் குழம்பு அல்லது வாழைப்பழம் அல்லது சீனி. ஏழு மணிக்கெல்லாம் இராச் சாப்பாடு முடிந்துவிடும். அதுவும் ''வடிவா அவியேல்லை'' என்ற அண்ணாவினுடைய குற்றச்சாட்டோடும் தாத்தாவின் மறுப்போடும்... மிஞ்சியிருக்கிற சோற்றை கறிச்சட்டிக்குள் போட்டுப்பிரட்டி நாய்க்கு வைத்த பிறகு......

'பயங்கரமாகக்' குளிரும். மண்ணுக்குள்ளை இருக்கிற வண்டுகளின் ''ங்ங்ங்ங்'' என்ற இரைச்சல்கள் விட்டு விட்டுத் தொடர்ந்து கொண்டிருக்கும். வீட்டுக்குப் பின்னாலிருக்கிற குளத்திலிருந்து 'கொறக்கட்டாக்' 'கொறக் கட்டாக்' என்ற தவளைகளினதும் 'குர்ம்ம்ம்' என்ற வேறு ஐந்துக்களினதும் சத்தம் தொடரும்.

இவன் சாரத்தைத் தூக்கிப் போர்த்துக் கொண்டு சிமினி விளக்கின் முன்கதிரையிலிருந்த கொஞ்ச நேரத்தின்பின், ஈசல்கள் வரத்தொடங்கும். பிறகு இவன் தலை, விரித்துப் படித்துக் கொண்டிருக்கிற புத்தகம் எல்லாம் ஊரத்தொடங்கி ... சில விளக்குக்குள்ளும் விழுந்து அணைந்துச் சாகும்.

காலையில் எழும்பி பள்ளிக்கூடம் போக நேரம் சரியாக இருக்கும். எப்போதும் பாண் அல்லது கடையில் வாங்கிய தோசை.

பள்ளிக்கூடத்தில் தேவாரம் படிப்பார்கள். காலை வெயிலில் நிற்கவைத்து முதலில் 'நமோ நமோ தாயே' சொல்லி, பிறகு பஞ்சபுராணம். அப்போதெல்லாம் இவனுக்கு சேட் நனைய நனைய வேர்க்கும். அடிக்கடி கைகளால் முகத்தைத் துடைத்துக் கொள்வான்.

ஒரு நாள் தேவாரம் படித்துக் கொண்டிருக்கின்ற போது பாலு வாத்தியார் கேட்டார்:

''இனிமேல் உந்தத் தேசிய கீதத்தைப் படிக்காம விட்டாலென்ன?''

அதிபரும் ஆசிரியரும் கூடிக் கதைத்தார்கள். பிறகு தேசிய கீதம் படிப்பதில்லை.

பள்ளிக்கூடத்திலும் அதிக நேரம் தமிழும் கணிதமுந்தான். புரட்டாதியில் புலமைப் பரிசிற் பரீட்சை. இவன் 'கொலசிப்' என்று சொல்லுவான்.

ஒவ்வொருமுறையும்போகிற போது அன்ரா சொல்லுவா ''விளையாடாமல் படியடா. செப்ரெம்பரிலை சோதனையெல்லே''

இவனுக்கு ஒரு மாதிரி இருக்கும். சுதந்திரம் பறிக்கப்படுகின்ற மாதிரி, கவலை கவலையாய் ......

இருபது நிமிட 'இன்ரேவலுக்கு' இவனும் பொடியங்களும் விளையாடுவார்கள். அந்த விளையாட்டு, கொட்டன்களும் ஊமல் கொட்டைகளும்பயன்படுத்துகிற (கொட்டன்களுக்கு கூடுதல் மதிப்பு) விளையாட்டு. 'பழங்காலத்து' கள்ளன் பொலிஸ் மாதிரி. பள்ளிக்கூடத்துக்கு வெளியாலையும் போய் விளையாடுவார்கள். பக்கத்தில் இருக்கின்ற நாலுபக்கமும் வேலியடைத்த, அடர்ந்து வளர்ந்த பனம் வடலிகளுக்குள் பொட்டு வைத்து உள்ளே போய், அதன் முடிவில் இருக்கிற பிள்ளையார் கோவிலில் எல்லாம் விளையாடுவார்கள்.

சரணாலயங்கள் போலிருக்கிற வடலிக்காணிகள்!

புல் எல்லாம் எரிந்து மணல் மட்டும் தெரிகிற பிள்ளையார் கோவில் வீதி!

மிகவும் விறுவிறுப்பாயிருக்கும்.

விளையாடுவதற்கு முதல் தண்ணீர் குடிப்பார்கள். சில நாட்களில் மட்டும் ஐஸ் பழம் அல்லது கறுவா.

மணி அடித்ததும் இவர்களுக்குக் கவலையாயிருக்கும். 'இன்ரேவலுக்குப்' பிறகுதான் மற்றப் பாடங்கள். ஆங்கிலமும் சுற்றாடலும் சமயமும்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு வடலிகளுக்குள் விளையாட முடியாது போனது. சிலபேர் நிஜமாகவே விளையாடினார்கள். கடற்கரைகளிலிருந்து ஊருக்குள் அடிக்கடி கனரக வாகனங்கள் வந்து போயின. இவன் பயந்து பயந்து போய் வந்தான்.

முதன் முதலில் ஊருக்குள் கனரக வாகனங்கள் வந்த போது இவன் வீட்டில்தான் நின்றான். கேள்விப்பட்ட போது இவன் நம்பவில்லை. முன்னர் தாத்தாதான் கூறியிருந்தாரே.

''ஊருக்குள்ளை ஏன்ரா வாறுங்கள்?''

இவன் ஆட்டுக் கொட்டிலுக்குள் இருந்து பார்த்தான். பின்பக்கத்துக் குளத்தங்கரையாலை - இவன் வீட்டு முள்ளுக் கம்பி வேலியருகே போனார்கள். எல்லாரும் லோங்சை மறைக்கும் சப்பாத்துக்களுடன், 'கருங்குழலேந்தி' கனமான தொப்பிகளுடன் பச்சை பச்சையாய் ......

மற்ற நாட்களில் எல்லாம் இவன் பள்ளிக்கூடத்துக்குப் போகிற போதுதான் கனமான வாகனங்களில் வந்து குதித்தார்கள்.

இவன் பள்ளிக்கூடம் போகும்போதே வந்துவிட்டார்கள். இவன் வீட்டையும் செக்கிங்குக்குப் போனார்களாம். தாத்தாவும் தங்கச்சியும்தான் வீட்டையிருந்தார்கள். மாமரத்திலை மாங்காய் ஆஞ்சு சப்பினார்கள். இளநீர் விசாரித்தார்கள். 'பெரிய வீட்டை' மட்டும் திறந்து அலுமாரி, சூட்கேஸ் எல்லாம் பார்த்தார்களாம்.

அன்றைக்குத்தான் இதுவும் நடந்திருக்கவேண்டும் 'கன' நாளைக்குப் பிறகு அன்ரா வந்த பிறகுதான் தெரிய வந்தது.

''கமெராவைக் காணேல்லை''.

தாத்தா ஏசினார்.

''அண்டைக்குப் போகேக்குள்ளை பெரியவன் சொன்னவன்தான். உங்கட சாமானெல்லாம் இருக்கோண்டு பாக்கச்சொல்லி. 'எனக்குத் தெரியுமே கமெரா இருக்கெண்டு''

அண்ணாவும் சொன்னார்:

''பருத்துறேலை எங்கட பள்ளிக்குப் பக்கத்திலை களவெடுத்தவனுக்கு கொமாண்டர் உரிஞ்சுபோட்டு அடிச்சவனும். அடுத்தநாள் வந்து, வீட்டுக் காரனுக்கு வேறை குறுப் அடிச்சதாம்''

இவனுக்குத் தெரியும் அண்ணா சொல்லுறதெல்லாம் நம்பமுடியாது. சிலவேளை 'புளுகு' ஆகவும் இருக்கும்.

முன்னாலை இருக்கிற மண் வீட்டையும் அன்றைக்குத் தான் எரித்தார்கள். குப்பைக்

(11ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூபதி:
## போராட்ட மையத்தை மாற்றியவர்



தமிழரின்விடுதலைப்போராட்டம் அதன் வன்முறைவடிவத்திலேயே உலகப்பிரசித்தம் பெற்றது; கீர்த்தியும்பெற்றது. இந்த வன்முறைப் போரட்டமானது தமிழ் மிதவாதிகள் கடைப்பிடித்த அகிம்சை முறையின் தோல்வியின் விளைவே என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. தமிழ் மிதவாதிகள் பின்பற்றிய அகிம்சையானது ஒரு பாவனையே தவிர, வேறொன்றுமில்லை. அவர்கள் தங்கள் கோழைத்தனங்களையும், சுயநலப் போக்குகளையும் மறைக்கக் கையாண்ட தந்திரோபாயமே அகிம்சைவாதமாகும்.

*அவர்கள் தமிழ்ச் சமூகத்திற்குக் காட்டிய அகிம்சையெல்லாம், சாகத் தயாராயிராதவர்கள் பின்பற்றும் ஒரு வசதியான போராட்ட முறை என்ற அர்த்தத்தில்தான்.*

இத்தனைக்கும், அகிம்சையின் உச்ச நிலையிலும் உயிர்த்தியாகம் தவிர்க்கமுடியாததே. இத்தகைய உயிரைக் கொடுத்துப் போரிடும் மனோதிடம், தியாகசிந்தை போன்றவை அநேகம் தமிழ் மதவாதத்தலைமைகளிடத்தில் இருக்கவில்லை, அவர்கள் இயலாதவர்களாயும் நசிந்தவர்களாயும் இருந்தார்கள். எனவே அகிம்சையை தங்களுக்கேற்றபடி வசதியாகவும், பிழையாகவும் வியாக்கியானம் செய்து கொண்டார்கள். சரியாகச் சொல்வதானால் அவர்களிற்கு அகிம்சை என்றாலே என்னவென்று தெரிந்திருக்கவில்லை. அப்படியிருக்க, அகிம்சா முறையின் தோல்வியிலிருந்தே ஆயுதப்போராட்டம் துவக்கப்பட்டது என்ற முடிவு எவ்வாறுபெறப்பட்டது? உண்மையில் இதுதான் நடந்தது: தமிழ் மதவாதிகளின் கோழைத்தனங்களையும் சுயநலப்போக்கையும், அவர்கள் பொய்யாகப் பின்பற்றிய ''அகிம்சா'' முறையின் போதாமைகளாகவும் தோல்வியாகவும் பிழையாக இனங்கண்டதிலிருந்தே தமிழரின் ஆயுதப்போராட்டம் அகிம்சா முறையின் தோல்வியின்விளைவு என்ற முடிவு பெறப்பட்டது

இந்த வகையில் அகிம்சையை, அதன் மெய்யான அர்த்தத்தில் பின்பற்றி பன்னிரண்டு நாட்களின் பின் பசியோடும் தாகத்தோடும் திலீபன் உயிரை விட்டான். இது யாழ்ப்பாணத்தில் நடந்தது. பின்னர் மட்டக்களப்பில் திருமதி பூபதி கணபதிப்பிள்ளை 31 நாட்கள் பசி கிடந்து உயிரை விட்டார்.

மட்டக்களப்பு அன்னையர் முன்னணி, பூபதி கணபதிப்பிள்ளையின் உண்ணாவிரதப் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியது. அன்னையர் முன்னணி, அரசியல் ரீதியாக ஒரு மிதவாத அமைப்பென்ற போதிலும், சமாதானத்திற்காக, மிகவும் கஷ்டமான தொரு காலத்தில் அது நடத்திய போராட்டம் முழு உலகின் கவனத்தையும் மட்டக்களப்பை நோக்கிக் குவித்தது. அப்போது, இந்தியத் தூதுவராயிருந்த ஜே. என். டிக்ஷிற் அன்னையரின் போராட்டத்தை மிகவும் கேவலமாக வர்ணித்தார். அது அன்னையர் முன்னணியல்ல, பாட்டிகள் முன்னணியென்றும் இனிமேல் தாத்தாமார் முன்னணியும் தோன்றலாம் என்றும் அவர் சொல்லியிருந்தார். ஒரு இந்தியர் என்ற வகையில், இந்திய சமூகத்தின் கண்ணியத்தை இலங்கைத் தமிழரின் முன் நிரூபிக்கத் தவறிய அபகீர்த்தி மிக்க ஒரு ராஜதந்திரிதான் டிக்ஷிற்.

மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் இந்த உண்ணாவிரதப் போராட்டம் தமிழர் விடுதலைப் போராட்டத்தில் கிழக்கு மாகாணத்திற்கு முக்கியத்துவமும், பிரசித்தமும் மகிமையும் பெற்றுத் தந்தவொரு போராட்டமாகும்.

பொதுவாக, தமிழர் விடுதலைப்போராட்டத்தின் துவக்கப் புள்ளியாகவும், மையப் புள்ளியாகவுமிருப்பது யாழ்ப்பாணமே. யாழ்ப்பாணத்தில்தான்போராட்டத்தின் ஆரம்பகாலத் தாக்குதல்களும், செயற்பாடுகளும் நிகழ்ந்தன. அநேகமான போராட்ட இயக்கத்தலைவர்களும் யாழ்ப்பாணத்தவர்களே. போராட்டத்தின் திருப்பு முனைகளாய் அமைந்த பிரதான சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில்தான் இடம் பெற்றன. 83 யூலை இனக்கலவரத்தோடு வேகமுற்ற ஆயுதப்போராட்டத்தின் தொடர்ச்சியாக, யாழ்ப்பாணம்தான் முதலில் ஒரு விடுதலைப் பிரதேசமாவதற்குரிய தயார் நிலைகளை எய்தியது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின் நிகழ்ந்த முக்கிய சந்திப்புக்கள், பேச்சுவார்த்தைகள் போன்றவற்றிற்கெல்லாம் யாழ்ப்பாணமே களமாயிருந்தது. கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரிகளைத் தவிர்த்துப்பார்த்தால், தமிழரின் சரியான வாழ்நிலைகளைப் பிரதிபலிக்கின்ற பத்திரிகைகள் என்று சொல்லக்கூடிய, சகல பத்திரிகைகளும் யாழ்ப்பாணத்திலிருந்தே வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதனால் தமிழ்மக்களின் அபிப்பிராயம் என்பது யாழ்ப்பாணத்தவர்களின் அபிப்பிராயமாகவே இனங்காணப் பட்டும் வந்திருக்கிறது.

*இத்தகைய யாழ்ப்பாண மையத்துவத்தை, பிரதேசவாதங்களினடிப்படையில் யாழ்ப்பாண மேலாதிக்கம் எனத் திரிபுபடுத்தும் போக்குகளும் உண்டு. இந்த யாழ்ப்பாண மையத்துவம் சரியானதா? பிழையானதா? என்ற கேள்விக்கு விடைகாண்பது இக் கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால், யாழ்ப்பாண மையத்துவமானது தமிழர் விடுதலைப் போராட்டத்தின் யதார்த்தங்களில் ஒன்று என்பதை இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்,*

ஆயுதப்போராட்டத்தலைவர்கள் அநேகர் யாழ்ப்பாணத்தவர்களாய் இருந்தார்கள். அவர்கள் போராட்டத்தின் துவக்க காலத்தில் ஆட்சேர்க்கும்போது தங்களிற்கு நம்பிக்கையானவர்களை அதுவும் தங்களிற்கு மிகவும் தெரிந்த வட்டத்திற்குள்ளிருந்தே தெரிந்தெடுத்தார்கள். இதுஒரு நடைமுறை சார்ந்த அணுகுமுறைதான். இதனால் இயக்கங்களின் ஆரம்பகால உறுப்பினர்களில் அநேகர் யாழ்ப்பாணத்தவர்களாகவே இருந்தார்கள். இத்தகைய பின்னணியில்தான் ஆரம்பகாலத் தாக்குதல்களும், நன்கு பரிச்சயப்பட்ட யாழ்ப்பாணத்திலேயே இடம்பெற்றன. மேலும், முக்கியமாக நகர்ப்புற கெரில்லாஅணியின் வளர்ச்சிக்குச் சாதகமான சமூக அமைப்பும் புவியியல் நிலைமைகளும், கிழக்கைவிட வடக்கிலேயே அதிகமிருந்தன. கிழக்கில் போராளிகள் பெருமளவு காடுகளையே சார்ந்தியங்கினார்கள். இதனாலேதான் நகர்ப்புறகெரில்லாப் போர்முறை யாழ்ப்பாணத்தில் வெகு வேகமாக வளர்ச்சி பெற்றது. ஒரு கட்டத்தில் யாழ்ப்பாணம் ஒரு விடுதலைப் பிரதேசமாவதற்குரிய ஆயத்தநிலைகளை எய்தியது. எனவே, யாழ்ப்பாணத்தில் மையங்கொண்டு இயங்குவது கெரில்லாப்போர் முறைக்கு வசதியானதாயும், பாதுகாப்பானதாயும் இருந்தது. யாழ்ப்பாணத்தவர்கள் கூடுதலாகக் கல்வியில் தங்கியிருந்தபடியால், அநேகமான பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திலிருந்தே வெளிவந்தன; வெளிவருகின்றன. இவ்வாறாக, யாழ்ப்பாண மையத்துவம் என்பது ஒருவகையில் போராட்ட யதார்த்தமாகவே இருந்து வருகிறது.

□ *நசிகேதன்* □

இத்தகைய யாழ்ப்பாண மையத்துவத்தைக் கிழக்கிற்கு மாற்றிய முக்கிய சம்பவங்கள் மூன்றெனலாம்: முதலாவது, *அன்னை பூபதியின் உண்ணா நோன்பு.* இரண்டாவது, *வடகிழக்கு மாகாணசபை திருமலையைத் தலைமையகமாகக் கொண்டியங்கியமை.* மூன்றாவது, *விடுதலைப் புலிகளின் வாகரை மகாநாடு.*

இதில் பின்னிரு சம்பவங்களும் பிரக்ஞை பூர்வமாக போராட்ட மையத்தை கிழக்கிற்கு மாற்றுதல் என்று திட்டமிட்டு, கிழக்கைப் பிரதானப்படுத்தி மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகளாகும். ஆனால் அன்னைபூபதியோ -அல்லது மட்டக்களப்பு அன்னையர் முன்னணியோ - அத்தகைய திட்டமிடல்கள் எதுவுமின்றியே போராட்டத்தை நடாத்தினார்கள். நிறுவன பலத்தோடு மேற்கொள்ளப் பட்ட பின்னிரு நிகழ்ச்சிகளிலிருந்தும் வித்தியாசப்படும் அன்னை பூபதியின் போராட்டம் அன்னையர் முன்னணியால் ஒழுங்கு செய்யப் பட்டதாயிருந்தாலும் அடிப்படையில் ஒரு தனி மனிதப் போராட்டமாகவே முக்கியம் பெறுகிறது.

திருமதி பூபதி கணபதிப்பிள்ளைக்கு முன்பு உண்ணாவிரதமிருந்த அன்னையர் முன்னணியைச் சேர்ந்த திருமதி அன்னம்மா டேவிற்றின் போராட்டத்தை இந்தியத் துருப்புக்கள் குழப்பின. முதலில் அன்னம்மா டேவிற் ரகசியமாக உணவூட்டப்படுவதாக வதந்திகள் வெளிவந்தன. பின்னர் இந்தியத் துருப்புக்களால் அன்னம்மா டேவிற் எடுத்துச் செல்லப்பட்டார். அவரும், அவரது புதல்வியும் தூரதர்ஷனிற்குத் தந்த பேட்டியில் அன்னையர் முன்னணி அவரைச் சாகும்படி நிர்ப்பந்தித்ததாகவும், ஆனால் அவருக்கு அவ்வாறு சாகும் விருப்பமேதும் இருக்கவில்லை என்றும் அவர் சாவதை அவரது குடும்பமும் ஆதரிக்கவில்லை எனவும் சொல்லப்பட்டது. இப்படியாக அன்னம்மா டேவிற்றின் உண்ணாவிரதம் அதற்குத் தரப்பட்ட கீர்த்திக்கும், பிரசித்தத்திற்கும் சமமான - ஏன் அதைவிடக் கூடுதலான - அபகீர்த்திக்கும் உள்ளாயிற்று. இந்த நேரத்தில் தான் அன்னை பூபதி, அன்னம்மா டேவிற்றின் போராட்டம் குழம்பினதால் உண்டான பழுதிலிருந்து தேசத்தின் மானத்தைக் காப்பாற்றினார். அவர் உண்ணாவிரதமிருந்த காலத்தில் அன்னம்மா டேவிற்றைப் போல அவ்வளவு பிரசித்தம் பெறாதபோதிலும் மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோவில் முன்றலில் 31 நாட்கள் பசித்திருந்த அம்முதிய தாயின் உயிர் எத்தகைய ஆரவாரங்களுமின்றிப் பிரிந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து போராட்டமையத்தை அன்னை பூபதி உணர்ச்சி பூர்வமாகக் கிழக்கிற்கு மாற்றினார். உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த முதலாவது பெண்மணியுமானார். *அவரது மரணம் பிரதேச வாதங்களைக் கடந்த 'தமிழரின் தாயகம்' என்ற சிந்தனையை ரத்தமும் சதையுமாக மெய்ப்பித்தது. ஒரு அமைதிப் படையிடம் அமைதி கேட்டு உபவாசமிருந்த அம்முதிய தாய் பசியால் சிறுகச் சிறுகச் சாவதை ராஜீவ் அரசு பார்த்துக்கொண்டேயிருந்தது. டிக்ஷிற் பார்த்துக்கொண்டேயிருந்தார். சனங்களோ குமுறினார்கள். இந்தியர்கள் மீதான கோபம் அதிகரித்தது...* 1988 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 19ஆம் திகதி தன்னுடைய 50ஆவது வயதில், அன்னை பூபதி பசியோடு உயிரை விட்டார். அவர் உயிர்துறந்து கிட்டத்தட்ட 23 மாதங்களின் பின்பு, இந்தியத் துருப்புக்கள் மிகுந்த அபகீர்த்தியோடு இலங்கையை விட்டு வெளியேறும்படியாயிற்று. □

## இ. தொ. கா.

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஒன்றை தினகரன் (25/03/1990), மாநாடு நடந்த தினத்தில் வெளியிட்டிருந்தது.

*ஆனால், எஸ் டி. சிவநாயகம் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய தலைவர் தொண்டமான்' என்றநூலிலோ (பக்கம் - 220), பிரஜா உரிமைச் சட்ட எதிர்ப்புப் பகிஷ்காரத்தைக் கைவிடுவதென்ற தீர்மானம் இந்த மாநாட்டில் நடைபெற்றதாகவும், அந்த வேளையிலேயே இத்தனை இந்தியத் தலைவர்களும்வந்திருந்தனர்என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.*

எத்தனை முரணானதகவல்கள்? இப்பவே இப்படியென்றால் இனி எதிர்காலத்தில் இ.தொ.கா. வின் வரலாற்றின் உண்மைத் தகவல்களை எப்படி அறிவது?

இ.தொ.கா. நடாத்திய சரித்திரப் புகழ்பெற்ற 'உருளை வள்ளி போராட்டம்' அக்கரபத்தனைப் பகுதியைச் சேர்ந்த உருளை வள்ளி தோட்டத்தில் நடந்ததாக கருதும் இன்றைய இளம் பிராயத்தினருக்கு, தனது பழைய வரலாற்றை, தீரமும் திகிலும் நிறைந்த சரித்திரத்தை — போராட்டம் நடாத்தி உயிர்களைக் காவு கொடுத்த கதையைச்—சொல்லத் தவறியமை, இ.தொ.கா. வுக்கு ஒரு பேரிழப்பாகும்.

43 ஆண்டுகளுக்குப் பின்னர் அரசியல் உரிமை பெற்ற ஒரு சமூகமாக நிமிரத்தொடங்கியிருக்கும் மலையக மக்களிடம், தமது அரசியல் சிந்தனைகளைப் பரப்பமுனையும் இயக்கங்களும், கட்சிகளும், தமது செயற்திட்டங்களைக் கடைவிரிக்க ஆரம்பித்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், இ.தொ.கா. தனது பழைய வெற்றி சாதனைகளை பட்டியல் போட்டுக் காட்டி பறை சாற்றிட இதைவிட வேறு நல்ல சந்தர்ப்பம் இல்லை என்பதை உணராதது ஏனோ? □

## உருளும் உலகில்



# பலஸ்தீன அரசு ஏற்படுவது சாத்தியமா?

இழந்துபோன தமது பலஸ்தீனத்தை மீளப் பெறுவதற்காக அரபு மக்கள் நடத்தும் போராட்டம் வெற்றி பெறுமா? எதிர்காலத்தில் பலஸ்தீன நாடு உருவாகுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டா என்பன போன்ற கேள்விகள் இன்று அடிக்கடி பலரால் கேட்கப்பட்டுவருகின்றன. இத்தகைய சந்தேகம் மிக்க கேள்விகள் எழுவதற்குரிய காரணம் இன்று தமது இழந்த தாயகத்தை மீட்டெடுப்பதற்காகப் போராடி வரும் பலஸ்தீன மக்களின் நிலைப்பாட்டிலிருந்தே எழுந்துள்ளதாக அரசியல் அவதானிகள் பலர் கணித்துள்ளனர்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தால் உருவாக்கப்பட்ட யூத இனப்பிரச்சினையின் தீர்வு, பலஸ்தீன மக்கள் தமது தாயகத்தை இழந்து நாடற்றவர்களாக்கப்பட்ட கதையாக முடிந்தது ஒரு விசித்திரமே. வல்லரசுகளின் சுயலாபச் சூழ்ச்சியின் துணையோடு பலஸ்தீனத்தை ஆக்கிரமித்துக் கொண்டதன்பின் தற்போது மத்திய கிழக்கின் 'குட்டிச் சண்டியன்' ஆக மாறியுள்ள இஸ்ரேலியரின் அடாவடித்தனங்களால் பலஸ்தீனியர் படும் அவலம் கொஞ்சம் நஞ்சமல்ல. இருந்தும் எதிரிகளிடமிருந்து தமக்கு உரியவற்றைப் பெற்றுக் கொள்வதற்காகத் தொடரப்பட்ட பலஸ்தீனியரின் போராட்டம் இன்று ஒரு ராஜதந்திர மாற்று வழியை முன்வைத்து நிற்கிறது. இதற்குரிய காரணம் என்ன?

மத்திய கிழக்கில், அரபு நாடுகளின் மத்தியில் ஒரு சிறிய மையமாக விளங்கும் இஸ்ரேல், அதனைச் சூழ்ந்துள்ள அரபுநாடுகளோடு ஒப்பிடும்போது, ஜனத்தொகை, பணபலம் போன்றவற்றில் போட்டிபோட முடியாத நாடாகவே இருக்கிறது. ஆனால் அது அப்படி இருப்பதன் காரணத்தால்தான், அது தன்னைத் தொழில் நுட்ப ரீதியாகவும், அதன் அடிப்படையில் கட்டப்பட்ட ராணுவ ரீதியாகவும் மிக வளர்ச்சி பெற்ற நாடாகத் திகழ்கிறது. மேலும் இன்றைய உலக விஞ்ஞான வளர்ச்சியின் முக்காற் பங்கு, யூதர்களுடைய பங்களிப்பால் உரம் பெற்றதென்றால், அவர்கள் இத்துறையில் தம் நாட்டை விருத்தி செய்திருப்பதில் வியப்பில்லை.

இருந்தபோதும் அரபு நாடுகள் தமக்குள் ஐக்கியப்பட்டு இஸ்ரேலுக்கெதிராகப் போர் தொடுத்திருந்தால் அதனால் தாக்குப்பிடித்துத் தனித்து நின்றிருக்க முடியாதென்பது உண்மையே. ஆனால் இஸ்ரேலியரின் அதிர்ஷ்டம், அரபு நாடுகள் எவ்வளவுதான் இஸ்ரேலியருக்கெதிரான உட்பகையோடு இருந்த போதும், அவர்களுக்கெதிராகப் போரிடுவதில் ஐக்கியம் உறவில்லை. காரணம், அரபு நாடுகளில் அனேகமானவை வல்லரசுகளின் வால்பிடிகளாக — குறிப்பாக அமெரிக்காவின் வால்பிடிகளாக இருப்பதே. அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான இஸ்ரேலுக்கெதிராக அமெரிக்காவின் அனுமதி இன்றி இவர்கள் போர்க்கோலம் கொள்ளப்போவதில்லை. இதுவே அன்றிலிருந்து இன்றுவரை தொடரும் நிலை.

அந்த அசிங்கமான நிலையிலிருந்து விடுபட்டு, தாயகத்தின் மீட்சிக்காகப் போராட வேண்டும் என்ற முனைப்போடு உருவாக்கப்பட்டதே *யசீர் அரபாத்தின்* தலைமையில் இயங்கும் பலஸ்தீன விடுதலை அமைப்பாகும் (P.L.O). இந்த அமைப்பின் கெரில்லா போராட்ட நடவடிக்கைகளும், முறைகளும் இஸ்ரேலியரைப் பயம் கொள்ளச் செய்தது உண்மையே. இதன் பதில் நடவடிக்கையாகவே இஸ்ரேல் மொசாட் போன்ற பயங்கர அமைப்புகள் மூலம் இயங்குவதற்குக் காரணம் ஆயிற்று. பயங்கர வாதம் — எதிர்ப்பயங்கரவாதம் என்ற நிலை நீடித்ததே ஒழிய, தாயக விடுதலைக்கான வழிகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படாததால், தமது வழி முறைகளை சுய விசாரணைக்குள்ளாக்கிய பலஸ்தீன விடுதலை அமைப்பு, தமது நிலைப்பாடுகளிலும் வழிமுறைகளிலும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. இந்த மாற்றத்தின் பிரதிபலிப்பே பலஸ்தீன *தேசிய பட்டயத் தீர்மானத்துக்கெதிராகக்* கொண்டுவரப்பட்ட இஸ்ரேல் நாட்டின் இருப்பை ஏற்றுக் கொள்ளும் அதே நேரத்தில் பலஸ்தீனத்தையும் அங்கீகரிக்கச் செய்தல் என்னும் மாற்று வழியாகும். பலஸ்தீனத் தேசியப் பட்டயமுடிவு, இஸ்ரேல் என்பதைப் பூரணமாக அழித்தொழிக்க வேண்டும் என்று கூறுகிறது.

பலஸ்தீன விடுதலை அமைப்பின் இந்தப் புதிய முடிவு, ராஜதந்திர ரீதியானது என்றே அரசியல் அவதானிகளால் கொள்ளப்படுகிறது. காரணம் இம்முடிவானது இஸ்ரேலுக்குப் பயந்தோ, அல்லது இயலாமையாலோ எடுக்கப்பட்ட முடிவல்ல என்பது முதலில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இன்று பி. எல். ஓ அமைப்பைவிட தீவிரமான இயக்கங்கள் பலஸ்தீனியர் மத்தியில் தோன்றியுள்ளன. இத்தகைய தீவிர இயக்கங்களுக்கு ஆதரவு கொடுப்பனவாகவே *சிரியா, ஈராக்* போன்ற நாடுகள் இயங்கி வருகின்றன. இவை இஸ்ரேலைப் பூண்டோடு அழித்துவிடும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு இயங்குபவை. அத்தோடு சுயாட்சி கோரும் பலஸ்தீனியப் பிரதேசங்களான *யோர்தான் மேற்கு கரையிலும், காஸா பகுதியிலும்* இஸ்ரேலுக்கு சவால் விடும் பெரும் கலகங்கள் மூண்டதற்குப் பின்னரே, பி. எல். ஓ. தனது புதிய பிரகடனத்தை மேற்கொண்டு, இஸ்ரேலோடு உடனிருந்து ஆட்சி நடத்தும் பலஸ்தீனத்தின் எல்லைகளையும் வரையறுத்துள்ளது. ஆகவே பி. எல். ஓ வின் விட்டுக்கொடுப்பானது பயத்தினால் எழுந்ததல்ல என்பதை இஸ்ரேல் புரிந்து கொள்ள வேண்டும் என்று அரசியல் அவதானிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். பி.எல். ஓ. தமது ஆரம்பகால நிலைப்பாட்டிலிருந்து மாறி, தற்போது இஸ்ரேலையும் ஏற்றுக் கொண்டு தமது தேசியத்தனித்தன்மையையும் பேண முன்வந்திருப்பது, ஒரு ராஜதந்திர ரீதியான நடவடிக்கையே. இன்று இலங்கையில் தமிழ் பேசும் இனத்தின் பிரச்சினை சம்பந்தமாக, இலங்கை அரசோடு புலிகள் அமைப்பு பேச்சுவார்த்தைக்கு முன் வந்தது போன்ற ஒரு புதிய ராஜதந்திர நடவடிக்கையே இது எனச் சொல்லப்படுகிறது. தமது லட்சியமான தமிழ் ஈழத்தை அடைவதற்கு புலிகள் கையாளும் *இடைக்காலத் தரிப்பு தந்திரம்* போலவே பி. எல். ஓவின் நடவடிக்கைகளும்அமையலாம் என அரசியல் அவதானிகளால் சொல்லப்படுகிறது,

எப்படி பி. எல். ஓ. யோர்தான் மேற்குக் கரையிலும், காஸா பகுதிகளிலும் இஸ்ரேலுக் கெதிரான இன்ரிஃபாடா போன்றவற்றின் தூண்டுதலால் ஏற்பட்ட பலத்த கிளர்ச்சிக்குப் பின் தனது உடனிருந்து வாழும் புதிய தந்திரோபாயத்தை அறிவித்ததோ அவ்வாறே விடுதலைப் புலிகளும் இந்தியப்படையோடு தமது போர்த்திறமையைக் காட்டிய பின்னரேபேச்சுவார்த்தைக்கு முன்வந்தனர். எனவே பலஸ்தீன அமைப்பும் சரி, விடுதலைப்புலிகள் அமைப்பும் சரி தமது இயலாமையால் தமது புதிய மாற்றத்தை முன்வைத்தனர் என்பதற்கில்லை என்பதுவும் தெளிவு.

இலங்கையில் விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தும் ஜனாதிபதி பிரேமதாஸவின் அரசு முன்மாதிரியாக இயங்குகிறதென்றே கூற வேண்டும். பலஸ்தீன விடுதலை அமைப்பை எதிர்கொள்ளும் இஸ்ரேலிய ஷாமிர் அரசு இதற்கு நேர்மாறான நிலையில் நடந்து கொள்ளத்திட்டம் தீட்டுவதே அதன் தீர்க்க தரிசனம் அற்ற செயல் என்றும் கொள்ளப்படுகிறது. அதாவது முன்னர் இலங்கையில் ஜே.ஆர் அரசு செய்ததுபோல் உரியவர்களோடு உரிய காலத்தில் பேசாது தட்டிக் கழித்து, தமக்குப்பிரச்சினை தருவனவாய் உள்ள அமைப்புகளை வலுவிழக்கச் செய்யும் முயற்சி போன்றதே இது. இன்று இஸ்ரேலிய ஷாமிர் அரசு, பி. எல். ஓ சம்பந்தப்பட்டளவில் இதையே செய்ய முற்படுகிறது.

ஆனால் இந்த வழிமுறையை ஷாமிர் அரசு மேற்கொள்ளுமானால் அது தனக்கும் தனது மக்களுக்குமே அழிவைக் கொண்டு வரலாம் என நம்பப்படுகிறது. காரணம் உரிய காலத்தில் இது சுமுகமாகத் தீர்க்கப்படாவிட்டால், மத்திய கிழக்கில் இது தொடர்பாகப் பெரிய யுத்தமே மூளலாம் என்றும் (சிரியா, ஈராக் போன்ற நாடுகளின் நிலைப்பாடுகள் இதையே காட்டுகின்றன) இது மீண்டும் வரலாற்றில் யூத இனம் காலத்துக்குக்காலம் அனுபவித்து வந்த அழிவையும், நாடு கடத்தப்படுதலையும் (EXODUS) அந்த இனத்துக்குக் கொண்டுவரலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினையும் இனியும் சுமுகமாக இலங்கை அரசால் தீர்க்கப்படாவிட்டால் அது இலங்கைக்குப் பெரும் அழிவை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. ☐

☐ *சிவா* ☐

---

*சென்ற வாரத் தொடர்ச்சி*

# மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலும் அடி; சர்வதேச மன்னிப்புச் சபைக்கு எல்லாப் பக்கத்திலும் அடி!

ச. ம. சபையை எடுத்துக் கொண்டால் அதன் செயற்பாட்டு முறை, பெரும்பாலும் அரசாங்கங்கள்மீது பல்வேறு அமுக்கங்களை ஏற்படுத்துவதையே குறிக்கோளாய்க் கொண்டிருக்கின்றது. பல தசாப்தங்களாகப் பரிச்சயமான ஒரு செயற்பாட்டுமுறையிலிருந்து மாறுபட்ட நிலைமைகளுக்குப் பொருத்தமான இன்னொரு செயற்பாட்டு முறைக்கு மாறுவதென்பது, அவ்வளவு இலகுவல்ல. இது பற்றி ச. ம. சபைப் பிரதிநிதிகளிடம் கேட்டால், அவர்களுடைய விடை பொதுவாக இப்படித்தான் அமைகிறது ''சரி. அவைகளை நாம் எப்படி எட்டுவது? கெரில்லாக் குழுக்கள் காடுகளுக்குள் பதுங்கியிருக்கின்றன என்று வைத்துக் கொண்டால், அவற்றை நாம் எப்படிச் சந்திப்பது? நாம் ஒரு ஆட்சேபனையை அனுப்புவதென்றால் எந்த விலாசத்திற்கு அனுப்புவது?'' இந்தப் பதிலில் குறிப்பிடப்படும் பிரச்சினைகள் உண்மையானவை என்று நான் ஏற்றுக்கொள்ளும் போதும், இது உண்மையான விடை என நான் கருதவில்லை. இவற்றிலிருந்து நான் வந்துள்ள முடிவு என்னவென்றால், ச. ம. சபை போன்ற நிறுவனங்கள் மரபு வழியாகச் செயற்பட்டு வந்த முறைகள், இன்றைய யதார்த்தங்களை எதிர்கொள்வதற்குப் போதுமானவையல்ல என்பதே. எனவே இந்தப்பழைய செயற்பாட்டு முறைகளையும் தாண்டி புதிய முறைகளை ச. ம. சபை போன்றநிறுவனங்கள் கையாள வேண்டும் என நான் நினைக்கிறேன். தார்மீக ரீதியாக ச. ம. சபைக்கு பெரும் மதிப்பு உண்டு. இந்தத் தார்மீக மதிப்பைப் பயன்படுத்தி, மனித உரிமைகளை மீறும் ஆயுதம் ஏந்திய குழுக்களுக்கு அது தார்மீக அமுக்கத்தைக் கொடுக்கலாம். எவ்வாறு அரசாங்கங்கள் மனித உரிமைகளை மீறும்போது அவை அம்பலப்படுத்தப்படுகின்றனவோ, அதே போன்று ஆயுதம் ஏந்திய குழுக்களின் மனித உரிமை மீறல்களுக்கும் அத்தகைய அம்பலப்படுத்தலை ச.ம. சபை செய்யவேண்டும்.

அரசுகளை அம்பலப்படுத்திக் கண்டிப்பதற்கே ச. ம. சபை போன்ற நிறுவனங்கள் தமது வளங்களைப் பயன்படுத்துவதால், இதனை அரசியல் ரீதியாகப் பார்த்தால், ச, ம, சபை அரசுகளிற்கு எதிரான இயக்கங்களுக்கு மறைமுகமாக ஆதரவளிக்கிறது என்ற குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இல்லையா? என்ற வினாவிற்கு றெஜி அளித்த பதில்: ''இலங்கையிலோ, வேறெந்த நாட்டிலோ போராளிக் குழுக்களை ஆதரிப்பதுதான் ச. ம. சபையின் நோக்கம் என்பதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஒரு காலத்தில் அந் நிறுவனம் ஒரு விதியைக் கடைப்பிடித்து வந்தது. ஆனால், இப்போது அவ்விதி நடைமுறையில் உள்ளதா என்பது எனக்குத் தெரியாது. அவ்விதியின்படி மனச்சாட்சிக் கைதிகள் என ச. ம. சபை யாரையும் பிரகடனம் செய்யும் போது அத்தகையவர்கள் வன்முறைகளில் ஈடுபட்டவர்களாகவோ, அல்லது அவற்றிற்கு ஆதரவளித்தவர்களாகவோ இருந்திருக்கக் கூடாது என்பதேயாகும். ச. ம. சபையின் உளப்பாங்கு இவ்வாறு அமைந்திருக்கும் போது, அந் நிறுவனத்தின் செயற்பாட்டு முறையின் விளைவாக — இது வேண்டுமென்று அவர்கள் திட்டமிடும் ஒன்றல்ல — ஒரு பக்கத் தோற்றத்தையே அவர்கள் முன்வைக்கின்றனர்.

இந் நிலையினைப் பயன்படுத்தி சில பயங்கரவாதக் குழுக்கள் அல்லது போராளிக் குழுக்கள், குறிப்பாக சர்வதேச மேடைகளில் தாம் மனித உரிமைகளை மீறுவதை மறைத்து, அரசின் ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகித் தாம் பலியாகி உள்ளனர் எனத்தம்மைக் கூறிக் கொள்வதற்கு வாய்ப்புண்டு.

(11ஆம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகள்

### 10-4-90 செவ்வாய்

பதுளை 'கிளன் அல்பின்' தோட்டத்தில் இரவு இனந்தெரியாதோர் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டனர் □ புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்குமிடையில், காலைகொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது வடக்கு கிழக்கு நிலைமை குறித்துத் திருப்தி தெரிவிக்கப்பட்டது. இரவு ஜனாதிபதியுடன் புலிகளின் குழு பேச்சுவார்த்தை நடத்தியது □ அன்னை பூபதியின் நினைவாக நல்லூரில்மாபெரும் எழுச்சி உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது □ இரவு, பருத்தித்துறையில் பொலிசார் மக்களைத் தாக்கியதில் பலர் காயமடைந்தனர்; புலிகள் இயக்க உறுப்பினரொருவரும் சூட்டுக்காயத்துக்குள்ளானார் □ திருமலை, வீரநகர்ப் பகுதியிலும் பொலிசார் பொதுமக்களைத் தாக்கினர் □

### 11-4-90 புதன்

வடக்கு - கிழக்கு மாகாண சபையை விரைவில் கலைக்குமாறு, ஜனாதிபதியிடம் புலிகளின் தூதுக்குழு வற்புறுத்தியதாக, அரசாங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது □ தமிழ்ப்பகுதிகள் எங்கும் மினிசினிமாக்களை அனுமதிப்பது என்றும், தனியார் ஒளிபரப்புகளுக்குத் தடை விதிப்பதென்றும், யாழ்ப்பாணத்திலுள்ள 'நிதர்சனம்' அலுவலகத்தில் நடைபெற்றகூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது □ சமாதானச் செய்தியுடன் சைக்கிளில் கொழும்பு வந்து கொண்டிருந்த வட பகுதிச் சாரணர் குழுவின் உறுப்பினரான இளம் ஆசிரியர், சிலாபத்தில் லொறி மோதி மரணமானார் □

### 12-4-90 வியாழன்

பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாத போதிலும், யாழ். நகர வங்கிகளில் பணக் கொடுக்கல் வாங்கல் இடம் பெற்றன □ நிபந்தனையுடன் வரும் எந்த இயக்கத்துடனும் பேச அரசு தயாரில்லையென, அமைச்சர் ரஞ்சன் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார் □ காலையில், வே. பாலகுமார் தலைமையிலான ஈரோஸ் குழுவொன்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியது □

### 13-4-90 வெள்ளி

நல்லூரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீதும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர் □ ஈ பி. ஆர். எல். எவ். அரசின் முன்வைத்துள்ள 19 அம்சக் கோரிக்கைகள் பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனையல்லவென, க. பிரேமச்சந்திரன் எம். பி. தெரிவித்தார் □ கடந்த செவ்வாயன்று பதுளையிலுள்ள தோட்டமொன்றில் நடைபெற்ற சூட்டுச் சம்பவம் தொடர்பாக, 6 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர் □ யாழ். நகர வங்கிகளில் பணக் கொடுப்பனவுகள் பொலிஸ் பாதுகாப்பின்றி இனிமேல் நடைபெறுமென, வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன □

### 14-4-90 சனி

'நாட்டு மக்கள் அனைவரையும் எங்கள் உடன் பிறந்தவர்களாகவும் நண்பர்களாகவும் மதிப்பதற்கு உறுதி பூணுவோமாக' என, ஜனாதிபதி தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார் □ தமிழ்ப்பகுதியெங்கும் புத்தாண்டு வைபவங்கள் கோலாகலமாக நடைபெற்றன □ வணக். பி. பாலித தேரர் தலைமையிலான தென்னிலங்கைச் சமாதானக்குழு யாழ்ப்பாணத்தில் பலரைச் சந்தித்தது □ யாழ். மாவட்டத்திலுள்ள சகல சிங்களப் பொலிசாரும் தென்பகுதிக்கு விரைவில் மாற்றப்படுவர் என மூத்தபொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார் □

### 15-4-90 ஞாயிறு

தமிழர் பிரச்சினை குறித்து நிரந்தர அமைதிக்கான தீர்வை ஜனாதிபதி எடுத்துள்ளார் என உணர முடிகின்றதென, ஈரோஸ் பாலகுமார் தெரிவித்தார் □ வடக்கு, கிழக்கு புனரமைப்புக்கு 2500 கோடி ரூபா அமெரிக்க உதவியாகக் கிடைத்திருப்பதாக, அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி தெரிவித்தார் □ மட்டக்களப்பில் பெரிய வெள்ளியன்று நடைபெற்ற சம்பவம்தொடர்பாக, 67 பொலிசார் தென் பகுதிக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டனர் □

### 16-4-90 திங்கள்

ரயில்வேப் பகுதியில் பாரிய டீசல் மோசடியைப் போக்குவரத்து அமைச்சர் கண்டுபிடித்து, நான்குஊழியர்களைத் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்தார் □ புதிய தேர்தல் நடைபெறும் வரை, வடக்குக் கிழக்கில் அனைத்துத் தமிழ் அமைப்புகள் இடம் பெறும் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும்படி, புளொட் தூதுக்குழு அமைச்சர் ஹமீதிடம் வற்புறுத்தியது □

# லண்டனில் போதைவஸ்து எதிர்ப்புச் சர்வதேச மாநாடு

போதைவஸ்து எதிர்ப்புக்கான சர்வதேச மகாநாடு அண்மையில் லண்டனில் முடிவடைந்தது. இது பிரிட்டிஷ் அரசாங்கமும், ஐக்கிய நாடுகள் சபையும் இணைந்து கூட்டப்பட்டது.

110க்கும் அதிகமான நாடுகளும், ஸ்தாபனங்களும் கலந்து கொண்டன.

போதைவஸ்து உற்பத்தி, கடத்தல், துஷ்பிரயோகம் முதலியவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு சர்வதேச ஒத்துழைப்புஅவசியம் என்று மார்க்கரட் தட்சர் வலியுறுத்தினர். போதைவஸ்து வியாபாரம் சில நாடுகளின் பொருளாதாரத்தில் முக்கிய பாத்திரம் வகிக்கிறது.

சர்வதேச அரங்கில் போதைவஸ்து வியாபாரம் வருஷத்திற்கு 50 கோடி டொலருக்கும் அதிகமாக உள்ளது. போதைவஸ்து பாவனை காரணமாக குற்ற நடத்தைகள் பரவுகின்றன. ஐ. நா. புள்ளி விபரத்தின் பிரகாரம் உலகில் நாலு கோடி போதைவஸ்துப் பாவனையாளர்கள் உள்ளனர்.

ஆசியாவிலேயே மிக அதிகம் போதைவஸ்து உற்பத்தியாகிறது. அங்கிருந்து, ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும் ஏற்றுமதியாகிறது.

போதைவஸ்து பாவனைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் அனுபவம், ஆராய்ச்சி வேலைகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளுவதற்காக ஐ. நா., யுனெஸ்கோ மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் வேலைத் திட்டங்களை உருவாக்க வேண்டுமென்ற யோசனை மகா நாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

## கிமா...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

படவிழாக்களில் காட்டப்பட்டன. ,தோகோ'வை பிரெஞ்சு தொலைக்காட்சி வாங்கியுள்ளது.

பழைய பொருள்களிலிருந்து புதிய பொருள்களை உருவாக்குவதில் நைஜர் மக்கள் அடைந்த வெற்றியை, மற்ற மக்களுக்கும் புகட்டுவதே தனது இலட்சியம் என்கிறார் கிமா. ''மக்கள் சற்று நின்று சிந்திக்கச் செய்ய வேண்டும்'' என்கிறார். ''புகோகியில் தயாரிக்கப்படும் பொருள்களைப் பலர் உபயோகிக்கிறார்கள். அதைப்போன்றே வேறு இடங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களையும் உபயோகிக்கிறார்கள். என்னுடைய படம் அப்பொருள்கள் எங்கிருந்து வருகின்றன என்பதைச் சிந்திக்க வைத்தது'' என்றார் கிமா.

''எனது படங்களின் இன்னொரு நோக்கம் கழிவுப் பொருள்களை உபயோகமானவையாக மாற்றும் கலைஞர்களுக்கு புகழாரம் சூட்டுவதுமாகும்'' என்கிறார் கிமா.

இலங்கையிலும் கழிவுப் பொருள்களைப் பயனுள்ளவையாக மாற்றும் தொழில்நுட்பம் இல்லாமலில்லை. ஆனால் எம்மில் எவரும் அதைப்பார்ப்பதில்லை. கட்டிப்பால் தகரத்திலிருந்து எத்தகைய பொருள்கள் உருவாக்கப் படுகின்றன எனப் பார்த்திருக்கிறீர்களா? இதுவரை பார்க்காவிட்டால் கொழும்பு புறக்கோட்டைக்குப் போங்கள்.

நன்றி:
இலங்கை சூழல் கொங்கிரஸ் □

## மத்தளத்திற்கு..

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலைமையை எவ்வாறு சமன்படுத்திச் சீராக்கலாம் என்ற கேள்விக்கு, றெஜி பின் வருமாறு பதிலளித்தார்:''எம்மைப் போன்றவர்கள் இந்த விஷயம் குறித்து எமது கருத்துக்களை ச. ம. சபை போன்ற நிறுவனங்களிற்கு மிக வலுவாக எடுத்துக் கூற வேண்டும். எமது கருத்துக்களை அவர்கள் ஏற்றுக் கொள்வதற்கு நாம் எம்மாலான அத்தனையையும் செய்ய வேண்டும். உதாரணமாக, 'சர்வதேச அலேர்ட்' 'ஏஷியாவோச்' போன்ற நிறுவனங்கள் கடந்த தசாப்தத்தில் இலங்கையைப் பற்றிக் காலத்துக்குக்காலம் வெளியிட்ட அறிக்கைகளில், பக்கம் சாராமல் மிக நிதானமாக அரசாங்கத்தின் நடத்தை குறித்தும், ஆயுதம் ஏந்திய குழுக்களின் நடத்தை குறித்தும் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளன. இத்தகைய நிலைப்பாட்டையே நான் ஆதரிக்கிறேன். □

## இவன்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

குள்ளே இரண்டு துவக்கும் குண்டும் இருந்ததாம். ஏழெட்டுப் பொடியன்கள் இரவில் படுத்த வீடு.

பிறகு எப்போதும் இப்படியே இருந்தது. அண்ணா ஒவ்வொருநாளும் 'இன்ரறெஸ்ரான' செய்திகளுடன் வந்தார். ஒரு நாள் நூலகம் எரித்த செய்தி. பிறகு அண்ணா பள்ளிக்கூடம் போகவேயில்லை.

ஊருக்குள் அடிக்கடி ஹெலிக்கொப்ரர்கள் ஏறி இறங்கின. இரவுகளில் சிவப்பு லைற்மட்டும் போட்ட 'சீப் பிளேன்கள்' தாழப் பறந்தன.

எல்லோரும் அண்ணாந்து பார்த்ததோ என்னவோ 'கன' பேருக்கு மூக்குக் கண்ணாடி தேவைப்பட்டது.

மாரி காலத்தில் இவன் ஐந்தாவது சேட் போடுவான். அதுவும் அந்த சிவப்புக் கோடன் ரீசேட்......

அது போட்டுக் கழட்டுகிற காலையில் ஆமிக்காரர்கள் வருவார்களாம். மூன்று முறை நினைத்தது நடந்தது.

பிறகு அவன் அதைப் போடவேயில்லை.

(அடுத்த வாரம் முடியும்)

## சிக்கல்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வராமல் தடுக்கக் கூடியதாய் இருப்பினும், கவனக் குறைவாலும் விரும்பத் தகாத கால நிலையாலும் பொருளாதாரக் கஷ்டங்களாலும், இது நடைமுறைப்படுத்தப்படாமல் போகலாம். உதாரணமாக, முன்னேற்றம் அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது, மூன்றாம் உலக நாடுகளில் மேற்கூறப்பட்ட காரணங்கள் கூடிய அளவில் நிலவுவதால், மிகவும் கூடிய தொகையான (வருடத்திற்கு200,000)போலியோ நோயாளிகள் உருவாகின்றனர். இதனைத் தடுக்கும் பொருட்டு தற்போது, பெரும்பாலான வளர்முக நாடுகளில் (இலங்கை உட்பட) அரசாங்கம் தனது செலவில் குழந்தைகளுக்குத் தடுப்பூசி ஏற்றும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது □

## கலை மேதைமை...

(7ஆம் பக்கத் தொட ச்சி)

...னைத் தங்கமாக மாற்றும் ..தி கொண்டது. அதன் மூலம் அவர் செல்வந்தராகிறார்; பலருக்கும் உதவுகிறார். இறுதியில் அவரது செல்வத்தின் ரகசியம் வெளிப்பட்டு விட, கல்லினை உதவியாளருக்குக் கொடுத்துவிட்டு மனைவியுடன் காரில் தப்பிச் செல்ல முயல்கையில், தங்கக்கட்டிகளுடன் பொலிசாரிடம் பிடிபட்டு விடுகிறார். பொலிசார் அவர் சொல்லும் கதையை நம்பாது அடைத்து வைக்கின்றனர். உதவியாளர், காதலியுடன் நேர்ந்த சச்சரவினால் விரக்தியடைந்து தற் கொலை செய்வதற்காக, கல்லை விழுங்கிவிடுகிறார். வயிற்றில் அது கரைந்து விடுவதில் கல்லின் சக்தியும் மறைந்து விடுவதால், எல்லாத் தங்கமும் பழைய படி இரும்பாக மாற்றமடைகின்றன. கணவனும் மனைவியும், தமது இன்னல்கள் தீர்ந்து விடுதலை பெற்று விடலாம் என மகிழ்ச்சியடைகின்றனர்.

நம்பமுடியாத கதை என்பதால் இது மனதில் நன்கு பதிய முடியாததாகி விடுகிறது. எனினும், ஒரு சாதாரண மனிதனின் தவிப்பும் ஏக்கமும் பூர்த்தியடைவது, அவனுள் உறைந்துள்ள நல்ல தன்மைகளினால் பலரும் நன்மை பெறுவது, தங்கம் அதிகாரிகளிடமும் வியாபாரியிடமும் ஏற்படுத்தும் சலனம்— உணர்ச்சித் தவிப்புகள் — போன்றவற்றை வெளிக்கொணர, அது உதவுகிறது.

துல்சி சக்கரவர்த்திக்காகவே இக் கதையைத் தான் எழுதியதாக, 'ரே' ஒரு முறை குறிப்பிட்டார். வங்கி ஊழியராக வரும் அவரது நடிப்பு, இப்படத்தின் முக்கிய அம்சமாயிருக்கிறது.

சமூக, அரசியல் பிரக்ஞையற்றவர் 'ரே' என்ற குற்றச்சாட்டு, இந்தியாவிலும் இங்குமுள்ள இடதுசாரி விமர்சகர் சிலரால் ஒரு காலத்தில் முன் வைக்கப்பட்டது. இக் கருத்துக்கள் எவ்வளவு அபத்தமானவை என்பதற்கு ஹிரேக் ராஜர் தேஷே, பிரதித்வந்தி, ஜல்சாஹர் ஆகிய படங்கள் சான்றாகும். கலாரீதியாக சமூக—அரசியல் பிரக்ஞை உருவாக்கப்படுவதை, திறந்த நோக்குடையோர் இலகுவாக இவற்றில் காணலாம்.

இன்னொரு முக்கிய அம்சம், இசையமைப்பாளராக 'ரே' யின் பங்களிப்பாகும்; மூன்று படங்களுக்கு அவரே இசை மைத்துள்ளார். 'இசையே எனது முதற் காதல்' என்று குறிப்பிடும் 'ரே' யின் இசைத் திறமை ஹிரேக் ராஜர் தேஷே'யில் வெளிப்படும் போது,மயங்காதோர்யார்? □

திசை
THISAI

# திசைமுகம்

'சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

## முதன்மைப்படுத்தப்பட வேண்டியது எது?

செயலற்றுப் போயிருக்கும் வட- கிழக்கு மாகாண அரசை மீளவும் இயக்குவதற்கான சில நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

அவற்றுள் முக்கியமானதாக 'புளொட்' இயக்கத்தின் அமைப்பான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினர், வட - கிழக்கின் சகல அரசியல் கட்சிகளும் சேர்ந்த ஒரு இடைக்கால மாகாண அரசை நிறுவவேண்டும் என்றும் இந்த இடைக்கால அரசின் மேற்பார்வையின் கீழேயே மாகாண அரசுக்கான தேர்தல் நடைபெறுவது அவசியம் என்றும் ஆலோசனைகளை அரசுக்குக் கொடுத்துள்ளனர்.

அரசு, இதைப் புலிகளோடு நடத்தும் பேச்சுவார்த்தை யின்போது முன்வைக்கப்போவதாக மேலும் அச்செய்தி கள் கூறுகின்றன.

இவர்களது மேற்படி யோசனைக்குரிய காரணம், விடுத லைப் புலிகளின் கையில் ஆயுதம் இருப்பது உண்மையான ஜனநாயக ரீதியிலான தேர்தலுக்குத் தடையாக அமைவ தோடு இது கடைசியில் புலிகள் வசமே முழு அதிகாரத்தை யும் ஒப்படைக்கின்ற நிகழ்வாக மாறிவிடும் என்கின்ற அச் சமேயாம்.

இதற்கு முன்னரும் வட - கிழக்கு மாகாண அரசுக்கான தேர்தல் நடந்ததையும் அதனுல் வட - கிழக்கில் ஒரு மாகாண அரசு நிறுவப்பட்டு ஆட்சி நடந்ததையும் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஆனல் இதன் முக்கிய அம்சம் என்னவெனில், முன்பு நடந்த மாகாண அரசுத் தேர்தலின்போது, அதில் சம்பந்தப் பட்ட சகலரும் ஆயுதபாணிகளாகவே இருந்தனர். மக்கள் பயமுறுத்தப்பட்டனர். இன்னும் வட பகுதியில் மக்கள் வாக் களிப்பு இன்றியே ''தேர்தல்கள்'' நடந்து முடிந்தன!

இப்போது நிலைமை வேருக மாறியுள்ளது.

முன்னர் மாகாண அரசை இயக்கியவர்கள் இப்போது இங்கே இல்லை. அவர்களுக்குப் பதிலாக அவர்களாலும் இந்திய அரசாலும் ஒதுக்கப்பட்ட புலிகள், தமது தனியான ராஜதந்திரத்தாலும் போர்த்திறமையாலும் தமது இழந்த அதி காரங்களை மீட்டெடுத்து முன்னணிக்கு வந்துள்ளனர். அதே நேரத்தில் தமிழ் மக்களின் பாதுகாப்பும் விடுதலையும் முன்பை விட ஸ்திரப் படுத்தப்பட்டுள்ளதாகவே பொதுவான அபிப் பிராயம் நிலவுகிறது. இச்சந்தர்ப்பத்தில் இன்னெரு முக்கிய அம்சமும் கூறப்படவேண்டும். அதாவது புலிகளையும் விட நவீன ஆயுதங்களை இந்தியாவிடம் இருந்து பெற்று 'தமிழ்த் தேசிய ராணுவம்' என்ற ஒன்றையே கட்டியெழுப்பியிருந்த முன்னைய மாகாண அரசு, தமிழ் மக்களுக்குப் போதிய பாது காப்பு அளிக்கமுடியாது, அப்பாதுகாப்புக்கு அந்நிய சக்தி யான இந்திய ராணுவத்தையே நிரந்தரமாக நம்பியிருந்தது.

ஆனல் இன்று அந்த அவல நிலை நீங்கி, நாம் நமது காலிலேயே நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது பெரும் சாதனையே. எனினும் தமிழ் மக்களின் பாதுகாப்பும் விடுதலையும் நிரந்த ரத் தீர்வை இன்னும் எட்டிவிடவில்லை. அந்த நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கும் அதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு இலங்கை அரசைப் பணிக்க வைப்பதற்கும் புலிகள் தமது கையிலுள்ள ஆயுதத்தையே நம்பியுள்ளனர் இந்நிலையில் அவர்களை ஆயுதங்களைக் களையும்படி கோருவது தற்கொலைக் குச் சமமானதே.

எனவே இந்நிலையில் ஆயுதங் களைதலை இப்போது முதன் மைப் படுத்தாது, ஜனநாயக ரீதியில் வட - கிழக்கு மாகாண அரசுக்கான தேர்தலை நடாத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற் கொள்ள வழிவகைகள் காண்பதே புத்திசாலித்தனமாகும். அதற்கொப்பவே விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் தேர்தல் செம்மையாக நடைபெறுவதை உறுதிப்படுத்த ஐ.நா. சபை கண்காணிப்புக் குழுவொன்றை தாம் பார்வையிட அனுமதிக்கத் தயாராய் உள்ளதாகக் கூறியதை நாம் இதற் கான நல்ல அறிகுறியென்றே சுட்டிக்காட்ட விரும்புகின் ரேம். □

# ரூபவாஹினியின் சிங்கள மனோபாவம்

கடந்த புதுவருட தினத்தி லன்றும், அதற்கடுத்த நாள் புதுவருடத்தையொட்டி ஒளி பரப்பப்பட்ட விசேட ஒளிபரப் பின் போதும், ரூபவாஹினி யில் தமிழ் படு மோசமாகப் புறக்கணிக்கப்பட்டி ருந்தது. புத்தாண்டு தினத்தில் காலை 5.30 இலிருந்து ஆரம்பமாகி நாள் முழுதும் நடந்த நிகழ்ச் சிகளில் தமிழில் 25 நிமிட நேரம் ஒரு இசை நிகழ்ச்சியும், 25 நிமிடநேர விவரணம் ஒன்றும், ஒருமணி நேர நாட கம் ஒன்றும், 30 நிமிடநேர இசை நிகழ்ச்சியொன்றும் ஒளிபரப்பாயின. இவ்வாறே புத்தாண்டிற்கடுத்த நாள் விசேட ஒளிபரப்பிலும், பிற் பகல் ஒருமணியிலிருந்து மூன்று மணிவரையிலும் ஒளி பரப்பான நிகழ்ச்சிகளில், தமிழில் ஒரேயொரு மெல்லி சைப் பாடல் மட்டும் — வனஜா சிறீநிவாசன் பாடி யது — ஒளி பரப்பப்பட்டது. தவிர சில இந்துக் கோவில் களில் பக்தர்கள் கூட்டத்தை யும், யாழ் நகரப் பகுதியில் புத்தாண்டுச் சன நெரிசலையும் படமாக்கிச் சிங்களப் பின்ன ணிக் குரலுடன் ஒளிபரப்பப் பட்டது. ரூபவாஹினியானது சித்திரைப் புத்தாண்டை தனியே சிங்களப் புத்தாண் டாகவேகாட்ட முயற்சித்தது.

மேலும் ரூபவாஹினியில் ஒளிபரப்பாகும் தமிழ் நிகழ்ச் சிகளின் போது, பெரும்பா லும் தயாரிப்பாளரின் பெயர் நிகழ்ச்சியில் பங்குபற்றியவர் களின் பெயர்கள் போன்ற விபரங்கள் தவிர, தொழில், நுட்பவியலாளர்களின் பெயர் கள் ஆங்கிலத்திலேயே ஒளி பரப்பாகின்றன. ஆனல் சிங் கள நிகழ்ச்சிகளின் போது சகல பெயர் விபரங்களும் சிங்களத்திலேயே ஒளிபரப்பப் படுகின்றன. பெரும்பாலான தொழில் நுட்பவியலாளர்கள் சிங்களவர்கள் என்பதாலா இந்த ஏற்பாடு?

தமிழிற்கு அரசியல் அந்தஸ் துத்தரப்பட்டு பல மாதங்களா கிறது. ஆனல், ரூபவாஹினி யின் தமிழைப் புறக்கணிக்கும் போக்கு இன்னும் மாறவே யில்லை. இடையில், புத்தாண் டிலிருந்து ஒவ்வொரு ஞாயிற் றுக்கிழமையும் பிற்பகல் ஒரு மணியிலிருந்து 3 மணிவரை தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப் பப்படுமென தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க, அமைச்சர் தொண் டமானிடம் உறுதியளித்து மிருக்கிறுர். ஆனல் புத்தாண் டிலன்றும், அதற்கடுத்தநாளும் ரூபவாஹினியின் 'சிங்கள மனோ பாவம்' மாறினதாகவே தெரி யவில்லை.

## மகனின் மரணத்திற்காக அழமுடியாத பெற்றோர்

உளவாளி என்று ஈராக் அர சினல் கடந்தமாதம் தூக்கிலி டப்பட்ட 'லண்டன் ஒப்சே வர்' பத்திரிகையாளர் ஃபஸாத் பஸொஃற் என்பவர் ஈரானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் தூக்கிலிடப்பட்டதை அறிந்து ஈரானில் உள்ள அவ ரது பெற்றோருடன் லண்டனி லிருந்து பஸொஃற்றின் நண்ப ரொருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித் தார். அப்போது, ''எமதுமகனை ஈரான் அரசும் எதிரியாகத் தான் கருதுகிறது. ஆனபடி யால் அவன் இறந்ததையிட்டு நாம் வாய்விட்டு அழுது எமது கவலையைத் தீர்க்க முடியாத வர்களாக இருக்கிறோம்'' என பஸொஃற்றின் தகப்பனர் சோகத் தவிப்போடு கூறின ராம்.

## சவப்பெட்டி ஊர்வலம்

அண்மையில் சான் பிரான் ஸிஸ்கோ நகரத்தில் புதுவித மான ஊர்வலம் ஒன்று நடத் தப்பட்டது பற்றி செய்திகள் வெளி வந்துள்ளன. ஊர்வலத் தில் கலந்து கொண்டவர்கள் 121 சவப்பெட்டிகளைக் காவிக் கொண்டு போனதே இந்த ஊர் வலத்தில் இடம் பெற்ற புது மையாகும்.

மேற்படி ஊர்வலத்துக்குரிய காரணம் இரண்டு கொலைக ளைச் செய்தவரெனக் குற்றஞ் சாட்டப்பட்ட 37 வயது நிரம் பிய றெபேர்ட் ஹரிஸ் என்ப வருக்கு அங்கு மரண தண் டனை வழங்கப்பட்டதே. இதனல் 23 வருடங்களுக்கு அங்கு அமுல் நடத்தப்படா திருந்த இத்தண்டனை மீளவும் அங்கு நடைமுறைக்கு வந் துள்ளதாகக் கருதப்படுகிறது.

## கல்விக் கருத்தரங்கு

ஏப்ரில் மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மூன்றும் மட்டக் கல்வி வாய்ப்புக்கள் என்ற பொருள் பற்றிக் கருத்தரங்கு ஒன்று கைலாசபதி கலையரங் கில் நடைபெறும். இக்கருத்த ரங்கினை யாழ். பல்கலைக்கழக மும், யாழ். கல்வித்திணைக்கள மும் கூட்டாக ஒழுங்கு செய் துள்ளன.

## இடைக்கால மாகாண சபை

வடக்குக் கிழக்கில் தற்போது கவர்னர் ஆட்சியே நடை பெற்று வருகிறது. வட — கிழக்கு மாகாண சபை நிருவா கத்தை இயக்கக் கூடிய சூழ் நிலைகள் சாத்தியப்படா விட் டால் தேர்தல் நடத்தப்படும் வரை அனைத்துத் தமிழ் அமைப்புக்களையும் உள்ளடக் கிய தொரு இடைக்கால நிரு வாகம் உருவாக்கப்பட வேண் டுமென, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) அமைச்சர் ஹமீதிடம் வலி யுறுத்தியுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரி வித்த விடுதலைப்புலிகளின் அர சியல் ஆலோசகர் டொக்டர் அன்ரன் பாலசிங்கம் இடைக் கால நிருவாகம் எதனையும் விடுதலைப்புலிகள் ஏற்க மாட் டார்கள் என்று அறிவித்திருக் கிறுர்.

## நாம் தனித்து நின்றே இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம்

— பிரபா

இந்தியத் தலையீடானது எமது சுதந்திரப் போராட் டத்துக்கு மிகப் பெரிய சவா லாக அமைந்தது. உலக வல்ல ரசுகளும், மூன்றும் உலக நாடு களும் இந்தியத் தலையீட்டை ஆதரித்து நின்றன. ஜெயவர்த் தன தலைமையிலான அன் றைய இலங்கை சிங்கள அர சும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டது. எமது சகோ தர இயக்கங்களும் எட்டப் பர்களாக மாறி இந்தியாவுக் குத் துணைபோயின. நாம் தனி த்து நின்று இந்தியத் தலை யீட்டை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று எமது தேசிய சுதந்திரத் தீயை அணைய விடாது போராடினேம். இறு தியில் வெற்றி கண்டோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாக ரன், நேற்று வட - கிழக்கில் நடைபெற்ற எழுச்சி தின வைபவங்களையொட்டி விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள் ளார்.

## ஆண்டு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளதாலும் விடுதலைப் புலிகளு டன் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதில் ஓரளவு வெற்றி பெற்றிருப்பதாலும் தனது அரசாங்கத்தின் செல் வாக்கு வளர்ந்திருப்பதாக ஜனதிபதி கருதி தேர்தல் களத்தில் குதிக்கலாம் என்றும் இவ்வவதானிகள் ஊகிக்கின் றனர்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 20-4-1990இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Q. D. / 83 / News / 90.